# விவேகபோதினி

| வருஷச் சந்தா | | “எப்பொரு ளெத்தன்மைத்<br>தாயினு மப்பொருண்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு.”<br>——திருவள்ளுவர். | விளம்பர விகிதம் | |
|---|---|---|---|---|
| உள்நாடுகளுக்கு | ரூ. 4 | | முழுப்பக்கம் | ரூ 10 |
| வெளிநாடுகளுக்கு | ரூ. 5 | | அரைப்பக்கம் | ரூ. 6 |
| தனிப்பிரதி - | அ. 6 | | கால்பக்கம் | ரூ. 3 |

தொகுதி XI | காளயுக்தி௵ பங்குனி௴ :: 1919-௵ ஏப்ரல்௴ | பகுதி 10

## லக்ஷ்ய பேதம்

### CONFLICT OF IDEALS

உரையுள துணர்த்துவ துணர்ந்து கோடியேல்
விரையுள வலங்கலாய வேத வேள்வியின்
கரையுள தியாவருங் கற்குங் கல்வியின்
பிரையுள தென்பது மைந்தன் பேசினன்.

வித்தின்றி விளைவதொன் றில்லை வேந்தநின்
பித்தின்றி யுணர்தியே லளவைப் பெய்தனன்
உய்த்தொன்று மொழியின்றி யுணர்தற் பாற்றெனக்
கய்த்தொன்று நெல்லியின் கனியிற் காண்டியால்.

தன்னுளே யுலகங்க ளெவையுந் தந்தவை
தன்னுளே நின்றுதா னவற்றுட் டங்குவான்
பின்னிலன் முன்னில னொருவன் பேரிலன்
தொன்னிலை யொருவராற் றுணியற் பாலனோ.

ஓமெனு மோரெழுத் ததனி னுள்ளுயி
ராமவ னறிவினுக் கறிவு மாயினான்
தாமமு முலகமுந் தழுவிச் சார்தலால்
தூமமுங் கனலும்போற் றொடர்ந்த தோற்றத்தான்.

இன்னதோர் தன்மைய னிகழ்வுற் றெய்திய
நன்னெடுஞ் செல்வமு நாளு நாமற
மன்னுயி ரிழத்தியென் றுரைஞ்சி வாழ்த்தினேன்
சொன்னவ னுமமென் றுணரச்சொல்லினான்.

வேறுமென்னொடு தரும்பகை பிறிதினி
வேண்டலென் வினையத்தால்
ஊறி யென்னுளே யுதித்தது குறிப்பினி
யுணர்குவ துளதன்றால்
ஊறி லென்பெரும் பகைஞனுக்
கன்புசாலடி யென்யா னென்கின்றான்
கோறி றென்றன னென்றலும் பற்றினர்
கூற்றினுங் கொலைவல்லார்.

குன்று போன்மணி வாயிலின்
பெரும்புறத் துய்த்தனர் மழுக்கூர்வாள்
ஒன்று போல்வன வாயிர மீதெடுத்
தோச்சின ருயிரோடும்

நின்று தீர்குது மென்குந ருருமெனத்
தெழித்தனர் சினவேழக்
கன்று புல்லிய கோளரிக் குழுவெனக்
கனல்கின்ற தறுகண்ணர்.

எறிந்த வெய்தன வெற்றின குத்தின
வீர்த்தன படையாவும்
முறிந்த நுண்பொடி யாயின முடிந்தன
முனிவிலான் முழுமேனி
சொறிந்த தன்மையுஞ்செய் திலவாயன
தூயவன் றுணிவொன்று
அறிந்த நாயகன் சேவடி மறந்தில
னயர்த்திலனவனுமம்.

உள்ள வான்பெரும் படைக்கலம் யாவையு
முக்கன வுரவோய்நின்
பிள்ளை மேனிக்கோ ரானிவந் திலதினிச்
செயலென்கொல் பிறிதென்னக்
கள்ள வுள்ளத்தன் கட்டினன் கருவிகள்
கதுமெனக் கனல்பொத்தித்
தள்ளு மின்னென வுரைத்தனன்
வயவரு மத்தொழிற் றலைநின்றார்.

ழிகுயி லிக்தன மடுக்கினர் குன்றெனக் குடக்
தொறுங் கொணரெண்ணெய்
இழுது நெய்சொரிந் திட்டனர் நெருப்
பெழுந் திட்டது விசும்பெட்ட
அழுது நின்றவ ரயர்வுற வையனைப்
பெய்தன ரரிஇயென்று
தொழுது நின்றன னுயகன் றுளிணை
குளிர்ந்தது சுடுதீயே.

அனந்த னேமுத லாகிய நாகங்க ளரு
ளென்கொலெனவன்னான்
நினைந்த மாத்திரத் தெய்தின நொய்தினி
னெருப்புகு பகுவாயால்
வனைந்த தாமனமேனியி னுன்றன் மேல்
வாளெயி றுறவூன்றிச்
சினந்த மீக்கொளக் கடித்தன துடித்
திலன் றிருப்பெயர் மறவாதான்.

ஒன்றவந்த பிடாரி ஊர்ப்பிடாரி ஆனதுபோல.

# விவேக போதினி

தொ. 11] காளயுக்தி௵ பங்குனி௴ [ப. 10

## தெய்விகக் காட்சி

### THE SCENE DIVINE

தந்தா ளிருங்கழற்கு தாழ்ந்தா ருளம்பாழ்க்கார்
வந்தா ளிரையாயர்க் கன்றூற்றின்—முந்தியவர்
ஞானஞ் செயமனத்துள் நாடி யொளிப்படிவா
ஞானஞ் செழிக்க நயம்?

"தமது உருவம் சாந்தியே குடிகொண்டது; அறிவே செறிந்தது தாங்கள் குணங்குறியற்ற இன்ப மூர்த்தி; சுத்த ஸத்வமே உருவெடுத்தவர்; மாயையைக் கடந்து விளங்கும் பரம்பொருள். அவித்தையின் செயலால் ஏற்படும் இச்சையின் பெருக்கே இவ்வுலக வாழ்க்கை யாகும். இந்த ஜடப்பொருள்களிடம் உமக்குப் பற்றெப்படி ஏற்படமுடியும்? எனினும், லோக நன்மையை நாடி, துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனத்திற்காக மனிதருள் மனிதராக மயங்கித் தவறினவரைத் தண்டித்து எளியவரைக் காத்து வரும் பெருமை, மற்று யாரிடமிருக்க முடியும்? அகந்தையின் பெருக்கினால் தாமே யுலகிற் கெல்லாம் தலைவராக எண்ணி என்னைப்போலத் தருக்கித் தவறிக் கேவலம் தமது படை தோள் வலிகளை நம்பிக் குருட்டுத் தனமாகத் தலை தெரியாது வெறிகொண்டு செல்வக் கள் குடித்துக் குதிக்கும் குருடர்கள், தங்களைக் காணில் தமது வீண் செருக்கொழிந்து நிஜபக்தியுடன் விளங்குவ ரல்லவா? ஞான விசாலமற்ற குறுகிய நோக்கினரது அவித்யா ஸுலோசனங்களைப் போக்கி நன்னிலை யளிப்பது தமது பிரபாவமென யாரு புகழ்வது? முன்னறிவின்றி யான் செய்த இத்தகைய செயலை மீண்டுஞ் செய்யச் சிந்தைகொள்ளா திருக்கும்படி தாங்களே அனுக்கிரஹம் புரியவேண்டும் நெடியோய் வாழி! இப்பூபாரத்தை யகற்றவெனத் தாம் திருவுள்ளம் கொண்டது பக்தர்களைக் காக்க வெனவே அன்றோ? தூய ஞானச் சுடரே!

மேவரு ஞான நந்த வெள்ளமாய் விதித்தோ னாகி,
மூவரும் ஆகி, அந்த மூவர்க்குள் முதல்வன் ஆகி,
யாவரும் யாவு மாகி, இறைஞ்சுவார் இறைஞ்சப்
[பற்பல

தேவருமாகி நின்றாய்! எனக்கெனச் செய்த ஆராதனத்தைத் தடுத்து ஏற்ற உம்மேல் க்ஷாத்ரங் கொண்ட அகந்தையேன், இந்நாட்டைக் கல்மழை பெய்து நாசமாக்கி விடுவதெனச் செய்த முயற்சி வீணாகச்செய்த உமது சக்தி எனது அகந்தையையும் ஒழித்திட்டது; என்னை உமது பாதத் தாமரைகளில் பதிந்து உமது திருவருளை ஏற்க என் மனத்தையும் கனியச் செய்தது; உம்மையே அடைக்கலமடையும்படி தூண்டியது. மூவா முதல்வா! எவ்வுயிர்க்கும் உயிராகி விளங்கும் என் ஐயனே! சரணம்! அடுத்துவந்தவர் தம்மைத் தள்ள லாகாது; காப்பாற்றும்."

இவ்வாறு தனது செயலழிந்த இந்திரன், காமதேனுவுடன் கண்ணபிரான் முன் தோன்றி அவரை வாயார வாழ்த்தினன்; வணங்கினன். அதைக்கண்டு மனக்களிப்புற்ற எம்பெருமான் "ஹே! மகபதி! தேவரையாளும் கர்வத்தால் நீ மயங்கிக் கிடந்தனை. ஆட்சி அகந்தை அனர்த்தத்தையே விளைக்கும். எனவே, உன்னைச் சீர்திருத்த வென்றே எனக்கெனச் செய்த ஆராதனத்தைத் தடுத்து, நீ என்னை என்றும் மறவாது விளங்கச் செய்தேன். செல்வக்கள் குடித்தாடும் குருடர்கள் என்னை எப்படிக் காணமுடியும்? ஆகவே, எவனை ஆள எண்ணங் கொண்டாலும், என்னைச் காணவொட்டாது அவனது பார்வையைத் தடுக்கும் செல்வத் திரையை ஒழிப்பதே என் முதல் வேலை. இந்திர! இனி நீ, விண்ணுலகடைவாய்; உனக்கு நன்மையே உண்டாகும். அங்கு எனது ஆணையைத் தவறாது ஆட்சி புரிவாயாக; அகந்தை ஒழிந்து, நெறிவழுவாது உனது ஆட்சி அங்குச் செழிக்கச் செய்வாயாக!" என அனுக்ரஹித்தனர். அதற்கிணங்கிய இந்திரன் தன்னோடு அழைத்துவந்திருந்த காம

ஒன்றான பிரபு உறங்கிக் கிடைக்கையில் பிச்சைக்கு வந்தவன் தத்தியோதனத்திற்கு அழுகிறானாம்.

தேனுவின் பாலாலும், தனது ஐராவதத்தினால் கொணரப்பட்ட ஆகாசகங்கைத் தீர்த்தத்தாலும் கண்ணபிரானுக்கு இந்திரபட்டாபிஷேகஞ்செய்து கோவிந்தன் என்னும் பெயரிட்டழைத்தான். அச்சமயம் உலகமுழுதும் களிகொண்டு விளங்கியது. ஸமஸ்த ஜீவராசிகளும் இருந்தவிடத்திருந்து ஆநந்தமடைந்தன. அக்கடுநெஞ்சக் கஞ்சன் மனமும் காரணமில்லாமலே அப்பொழுது கிளுகிளுத்தது.

செருக்கொழிந்த இந்திரன் செலவுபெற்றுச் சென்றதும், கோபாலர்கள் குய்யோமுறையோ வென இறைச்ச விட்டுக்கொண்டு கண்ணன் முன்வந்து "நந்தகோபர் காளிந்தியில் அனுஷ்டானத்திற் கிரங்கியதும் உள்ளேயே ஆழ்ந்துவிட்டனர்" எனக் கண்ணீர்விட்டுக் கதறினர். உண்மையை யுணர்ந்த கண்ணபிரான் "பயப்படவேண்டாம். என் தந்தை ஏகாதசி துவாதசி விருதங்களை முடித்ததும், இரவு அஸுர வேளையில் அனுஷ்டானத்திற் கிறங்கியதால், வருணஸேவகர் அவரைத் தமதரசர்முன் கொண்டு சென்றனர். இதில் என்ன தவறு? தவறு செய்பவர் தண்டனை யேற்க வேண்டியதே யல்லவா? எனினும், நான் வருணலோகஞ் சென்று அவரை அழைத்துவருகிறேன். கவலையை ஒழியும்; பயப்படாதிருங்கள்" எனத் தேற்றிவிட்டு வருணலோக மடைந்தனர்.

ஸர்வலோக நாயகன் தன்னைத் தேடிவரக் கண்ட வருணன், அவரை விதி முறைப்படி பூஜித்துக் களிப்புற்று "இன்றே எனது அகம் பெருமை பெற்றது! என் ஐயனே! தமது வரவால் யான் தன்யனானேன்! ஸர்வலோக சரண்ய! தமது பாதரவிந்தங்களில் பதிந்தவர் பிறவாழி கடப்பரன்றே? மாயையைக் கடந்த மாதவ! அறியாமையால் தமது தந்தையை இங்குக் கொணர்ந்தான் என் சேவகருள் நல்லது கெட்டதின்னதென அறியா முழுமூடனொருவன். அப்பிழையைப் பொருத்தருள வேண்டுகின்றேன். தமது அன்பிற்குகந்த தந்தையைத் தம்மோடு அழைத்துச் செல்லும்" எனச் சொன்னான். கண்ணனும் அவ்வாறே செய்து தனது கோபால நண்பர்கள் வயிற்றில் பாலைக் கறந்தனர்.

இளஞ்சிறுவனாகத் தமது வீட்டில் விளையாடியலைந்த கண்ணனை வரவேற்று வருணன் செய்த மரியாதையைக் கண்ட நந்தன் ஆச்சர்ய மடைந்தான்; மதிமயங்கினான்; தனது குழந்தையெனத் தான் எண்ணிய அச்சிறு உருவம் ஸர்வலோகங்களையுங் கண்ட பொருளென ஒருவாறு நினைத்தான். அப்போது அவனுக்கு முன் கர்க்கியர் கூறிய மொழிகள் ஞாபகத்திற்கு வந்தன; இடையிடையே, பிள்ளைமேற் கொண்ட அன்பினால் தோன்றிய ஸந்தேஹம் சற்றேஒழிந்து உண்மையில் கண்ணன் பரம்பொருளாகத்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணம் அவன் மனத்துள் ஊன்றி நிலைத்து வளரத்தலைப்பட்டது.

தம்மோடு வாழ்பவரிடம் தெய்விகம் விளங்குவதைக் காண்பது எவர்க்கு மியலாது. எச்சமயங்களிலும் பக்கத்திலேயே இருப்பதால் அத்தெய்விகத் தன்மையின் பிரபாவம் எளிதில் அவர் அறிய முடியாதாய் விடுவதியற்கை. மற்று பழக்கத்தினால் ஏற்படும் மயக்கத்தினால், ஊன்றிக் காணும் நுட்ப உணர்ச்சி மங்கி, அறிவுகுன்றி, குறுகிய திருஷ்டி ஏற்படுவ தியற்கையின் வழி. சிறு நாள் முதல் கொண்ட அபிப்பிராயங்களின் சேர்க்கை, அதனால் மனத்துள் அசைக்க முடியாது தனித்து வளரும் திடமான நோக்கம் ஆகிய இவை, உணரும் ஆவலைச் சரியான வழியிற் செல்லவிடாது பின்பற்றியிழுக்கும். இவற்றின் வலையை யறுத்து, அறிவைச் சரியான வழியிலோட்டச் சில வபூதமான காட்சிகள் அல்லது செயல்களாற்றான் முடியும்? கடவுளில்லையென வாதிக்கும் நாஸ்திகனுக்கு, தொன்று தொட்டு மனத்துள் நிலைத்த எண்ணத்தை அகற்ற, கேவலம் அவனது காரணகாரிய விவகார எல்லையைக் கடந்து விளங்கும் ஓர் அதிசயச் செயலே அவன் மனத்தைக் கலக்கிக் குழப்ப முடியுமல்லவா? அப்போதுதான் அவன் மனத்தில் ஆஸ்திகவேர் ஊன்ற இடமேற்படும்; காரணங் கடந்த ஒரு பொருளிருப்பதன் உண்மை புலப்படும். குழந்தையாகவே பாவித்து வளர்த்து வந்த நந்த கோபனுக்குக் கண்ணனிடம் விளங்கும் தெய்விகம் எப்படி வெளிப்படையாக முடியும்? எது செய்யினும், அது தனது குழந்தையின் திருவிளையாடல்களில் ஒன்றெனவே அவனது பெற்ற அன்பு பெரிதும் பாராட்டச் செய்தது. அவ்வன்பின் தளைகளை முறித்து அக்குழந்தையைச் சுற்றி விளங்கிய தெய்விகப் பேரொளியை அவன் எப்படிக்காண

ஒன்றால ஒன்று குறை இல்லை, முன்னாலே கட்டத் துணி இல்லை.

முடியும்? ஊர்க் காசனுனுைம் தாய்க்குத் தன் குழந்தைதானே என்பது பொய்யா? எனவே, அவனுக்கு வருணன் கண்ணனுக்குச் செய்த மரியாதையைக் கண்டதும், கண்ணனைப்பற்றி அவன் கொண்ட அபிப்பிராயம் மாற்ற மடைந்தது; மனோதிருஷ்டியும் விசாலித்துக் கண்ணனே கடவுளாயிருக்க வேண்டுமென எண்ணச் செய்தது.

இத்தகைய எண்ணம் அவன் மனத்துதிக்க வேண்டுமெனவே, கண்ணன் நந்தகோபனை அஸுரவேளையில் காளிந்தி நதியில் அனுஷ்டானஞ்செய்யும்படி தூண்டியது. தமது தெய்விகத்தை வெளிப் படுத்த மனங் கொண்டதும், அவ்வழிக்குத் தம்மைப் பெற்றுவளர்த்தார் தடையா யிராது ஆதர வாயிருக்க வெனவே செய்ததாகும். "வருணன் கண்ணனை வரவேற்பது எப்படி முடியும்? அப்படி வரவேற்ருல் அதற்கு என்ன காரண மிருக்கும்? அவன் ஆராதனஞ் செய்யத்தக்க மஹிமை கண்ணனிடமுண்டோ? மனிதரைக் காக்குந் தெய்வங்களே மதிக்கும் பொருள் நமது கண்ணன் என்ருல், கண்ணனெங்கே, நாமெங்கே. அகோ! இது குழந்தையல்ல, குலதெய்வமாகும்; சிறுவனல்ல, கடவுளே உருவெடுத்தவன்" என எண்ணும் பாமர ஞானமே நந்தகோபனது உள்ளத்தைக் கவர்ந்து வியக்கச் செய்து, கண்ணனைப்பற்றித் தான் கொண்ட எண்ணங்களை வெளியிட அவனைத் தூண்டியதாகும். அவன் சொல்லக்கேட்ட கோபர்கள் கடவுளின் பரமஞான நிலையைக் காண ஆவல் கொள்வது, இச்சையின் போக்கே யல்லாது உண்மை ஆவலின் பெருக்காகவும் மிருக்குமல்லவா?

வருணலோகத்தில் கண்ணனுக்கு நடந்த சிறப்பைப்பற்றி விஸ்தாரமாகக் கேட்டறிந்த கோபாலர், அவரது உண்மை ஸ்வரூபதர்சனங் காணக்கொண்ட பேராவலின் எழுச்சியின் ஆழத்தை உணர்ந்த கண்ணபிரான், அவரைத் திருப்திபடுத்த எண்ணங் கொண்டனர்; புலன்களின் செயல்கடந்து விளங்கும் பரம யோகிகளின் உள்ளத்துறங்கும் தமது தெய்விக வடிவை அவர்க்குக் காட்ட மனமிசைந்தனர். எனவே, தமது நோக்கத்தை வெளியிடாது கோபாலர்களை யமுனைக் கழைத்துச் சென்று, அங்குப் பிரமகிதை என்னும் மடுவில் அவரை முழுக்கிடும்படி செய்தனர்.

அவ்வாறு அவர் செய்யும்போது பிரகிருதியைக் கடந்த தமது தேஜோரூபத்தை எம்பெருமான் அவர் முன் பொலிந்து விளங்கச் செய்தனர். அப்பிரபாவத்தின் பெருக்கிலாழ்ந்த அவர், அவ் யமுனை நீருள் மூழ்கிக் கிடந்தனர்; போக்கு வரவற்று, செயலற்று, அந் நீருள் இந்திரிய வியாபாரங்களற்று, தம்மைப் பற்றிய எண்ணம் முழுதுமற்று, அவாவற்று,

அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறைப் பற்றே

என்னும் பெரியார் வாக்கிற்கு உருவகமாகி விளங்கினர். அப்போதவர்கண்ட காட்சி யிருந்தவாறென்னே! அறிவினூறும் ஆனந்த வெள்ளம் புரண்டு செழுஞ்சுடராய்த் திரண்டு பகலொளியைக் கடந்து அவரெதிரே விளங்கக் கண்ட அவர் இவ்வுலகவாஞ்சையற்றுக் கிடந்தனர். நீருள் இருந்தால் என்ன? வேறு எங்கிருந்தால் என்ன? உள்ளத்துணர்வை உள்ளன்போடு காண்பார்க்குப் பழுதேப்படி ஏற்படமுடியும்? மயக்கமெங்கு வரும்?

'ஆயர் கொழுந்தாய் அவராய் புடையுண்ணும்
மாயப் பிரானையென் மாணிக்கச் சோதியைத்
தூய அமுதைப் பருகிப் பருகி யென்
மாயப் பிறவி மயர்வறுத் தேனே'

என அக்கோபாலருள் ஒவ்வொருவரும் அவ்வகண்டசோதிப் பெருக்கின் பெருமையைப் பாராட்டி விளங்கியதன் தன்மை ஞானனுபவச் செல்வரன்றி மற்று யார் அறியமுடியும்? தானே யாகிவந்து தடுத்தாட்கொள்ளும் கடவுட் பிரபாவத்தை வெளியிட யாரே வல்லார். அதனுலேயே அல்லவா,

'பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!'

என்று உள்ளம் நெக்குநெக்குருகிய பரம ஞானிகள் வாய்விட்டலறினர்?

அவர் பெருமை யாருக்குத்தான் தெரியும்?

# ஸ்ரீ வான்மீகரும் தென்னாடும்

## SRI VALMIKI AND SOUTH INDIA

"வாக்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென் [பான்
நீங்கவிசெவிக ளாரத் தேவரும் பருகச்செய்தான்."

என்று மகாகவிகள் புகழும் ஸ்ரீ வால்மீகி முனிவர் தம் காலத்தில் விளங்கிய பரதகண்ட நிலையைத் தம் ஆதிகாவியத்தில் உரிய விடங்களிலெல்லாம் சூசிப்பித் தருளுவர். அம்முறைப்படி, தென்னாடும் அவர் வாக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. வான்மீகி முனி கூறிய தென்னாடென்பது, விந்திய மலையின் தென்பக்க முழுமையுமாம். கிஷ்கிந்தையில், * சுக்கிரீவ மகாராஜன், பிராட்டியைத் தேடி வரும்படி வானரவீரர்களை ஏவும்போது, தென்பக்கமாகச் செல்லுதற்குரியாரை நோக்கிச் சொல்லியதாக வால்மீகி முனிவர் கூறியவை அடியில் வருமாறு :—

"அப்பெரிய வானரசேனையை அனுப்பிவிட்டுக் குறிக்கப்பட்ட வானரர் சிலரைத் தென்றிசைக் கேவுவானாயினான். * * * பின்பு அவன் தென்றிசையில் போதற்கரிதாயிருக்குமென்பதைப்பற்றி அவர்களை நோக்கிச் சொல்லத் தொடங்கி 'பலவித மரங்களும் கொடிகளுஞ் செறிந்த ஆயிரஞ் சிகரங்களையுடைய விந்த மலையையும், பெரும் பாம்புகள் தங்குவதும் கடத்தற்கரியதுமாகிய நருமதா நதியையும், பெரும் பகுதிகளையுடைய வரதா நதியையும், மேகலை உத்கலை தசார்ண முதலிய நாடுகளையும், அசுவவந்தி அவந்தி முதலிய நகரங்களையும் நீங்கள் காண்பீர்கள் ; விதர்ப்பம், ருஷிகம், மாகீஷகம், வங்கம், கலிங்கம், கௌசிகம், மலைகளும் நதிகளும் குகைகளுமுடைய தண்டகாரணியம், கோதாவரி நதி முதலியவற்றையும் காண்பீர்கள். அவ்வாறே, ஆந்திரம், புண்டரம், சோளம், கேரளத்தோடு கூடிய பாண்டிய நாடுகளையும் காண்பீர் ; பின்பு, தாதுக்கள் நிறைந்ததும் விசித்திரமான சிகரங்களுடையதும் பல வர்ணமான பூக்கள்நிறைந்த சோலைகளையுடையதும் சந்தன வனங்கள் செறிந்ததுமான பெரிய அயோமுகமலையைத் தேடுங்கள் ; அதன்பின், தேவரம்பையர்வந்து நீராடுகின்ற திவ்யமான தெளிந்த நீரையுடைய அழகிய காவேரி நதியை அங்கே காண்பீர்கள் : அந்த மலய மலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனி சிரேஷ்டரான அகஸ்தியரைக் காண்பீர்கள். அம்மகரிஷியிடத்தில் ஆணைபெற்றுச் சென்று, முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபர்ணி நதியைத் தாண்டுங்கள். அந்நதி அழகிய சந்தனச் சோலைகளால் மூடப்பெற்ற திட்டுக்களையுடையதாய், கணவனிடத்தன்புள்ள யுவதியானவள் புக்ககம் புகுமாறுபோல, சமுத்திரத்திற்சென்று விழும். பிறகு பொன் நிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்தமயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும், பாண்டியர்க்கு யோக்கியமாயுமுள்ள கவாடத்தையும் பார்க்கக் கடவீர்கள், அதன்பின் சமுத்திரத்தை யடைந்து காரிய நிச்சயத்தைச் செய்யுங்கள் !"

வான்மீக பகவானது இவ்வாக்கியங்களில் விந்திய பர்வதத்துக்குத். தென்பக்கத்தே— நருமதை, கிருஷ்ணவேணி, கோதாவரி, காவிரி, தாமிரபர்ணி முதலிய நதிகளும், மேகல தேசம் (விந்தப்ரதேசம்), உத்கல தேசம் (கஞ்சம்), தசார்ணம் (சண்டாகிரியின் கிழக்கு), அசுவவந்தி, விதர்ப்பம் (பீரார்), ருஷிக தேசம் (பங்காளப் பகுதி) மாகீஷக தேசம் * கலிங்கம் (வடசர்க்கார்), கௌசிகம், ஆந்திரம் (தெலுங்காணம்), புண்டரம் (வங்க தேசப் பகுதி) சேர சோழபாண்டியம் முதலிய நாடுகளும், தண்டகாரணியம் என்ற பெரிய வனமும் குறிக்கப் பட்டுள்ளன. சுக்கிரீவன் வானர வீரர்களைத் தென்றிசைக்குச் செல்லும்படி விடுக்கு மிடத்து, இந்நாடு முதலியவை வருதலால், இவை ஆரிய மக்களால் தக்ஷணப் பிரிவுகளாக முன்பு கருதப்பட் டிருந்தன வென்பது விளங்கும்.

இவற்றுள் தண்டகாரணியத்தினைப் பற்றிய

* கிஷ்கிந்தை என்பது, துங்கபத்திரா நதிக்குச் சமீபமானதும் பம்பாசரஸ் இருந்த இடமுமாகிய ஹம்பி நகரை அடுத்து, மதங்காசிரமத்தைப் பெற்றிருந்ததாகிய ரிசியமூக பர்வதம் "மான் மலை" என்பதன் தென்பாலும், நீலகிரி, குடகுமலைத் தொடர்களுக்கு வடபாலுமாக, மைசூர் மலைப் பிரதேசங்களையுள்ளடக்கிய மேற்குத் தொடர்ச்சி மலையாம்.

* இது விந்தப் பிரதேசத்தைச் சார்ந்த அநூப தேசத்தின் தலைநகர் என்று இரகு வம்சத்து 6-ம் சர்க்கம், 37, 43-ம் சுலோகங்களால் விளங்கும்.

ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இலேசு.

வரலாறுகள் சில வான்மீகத்தினின்று அதிகமாக அறியப் படுகின்றன. இவற்றை, யாழ்ப்பாணத்து ஸ்ரீமான்-முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் மேல் வருமாறு குறித்திருக்கின்றனர். “பகவான் அகஸ்திய முனிவர் ஸ்ரீராமனை நோக்கி, இத்தேசத்தினது வரலாற்றை உள்ளவாறு கூறுவேன் கேட்பாயாக: பார்க்கவ மகரிஷியினது சாபத்தால் தண்டகனு மழிந்து அவன் தேசமாகிய இதுவும் மக்களும் விலங்குகளும் வாழப் பெறாத தாயிற்று. விருக்ஷம் செடி கொடிகள் தவமுனிவர்கள் இல்லாததும், மிக்க பயங்கரமும் சகித்தற்கரிய வெம்மையு முடையதுமாகிய பாலை நிலமாயிற்று. விந்திய கிரியினது அடிவார முதல், தெற்கே ஆயிரம் யோஜனை தூரம் வரையும் மழை வீழ்தலும் சுகமான காற்று வீசுதலும் இல்லை. மிக்க பயங்கரமுடையதும் கொடியதும் கனற்புகை சூழ்ந்தது யாகிய காடாய்ப் பல்லாயிரம் வருஷம் நிர்மானுஷ்யமாய்க் கிடந்தது. பின்னர், வெள்ளி மயமாகிய இமயத்தினின்றும் இங்கு வந்தேன். பர்ஜன்னிய மென்னும் ஜல தேவதையோடு மேகங்களைக் கொணர்ந்தேன். இமயத்திலிருந்து நானுவகை ஒஷதிகளும் கொணர்ந்து வளர்க்கப்பட்டன. மீண்டும் அழகிய தாமரையோடைகளும் நதிகளும் குளங்களும் அமைக்கப்பட்டன. அவற்றால் செழித்தடர்ந்த திவ்ய வனங்களும் பலவகை தானியங்கள் விளைகின்ற விளையுள்களும் உண்டாயின. வனங்களெங்கும் இருடிகள் குடிகொண்டார்கள். மனதிற்குக் களிப்பைத் தருகின்ற காட்சியினையுடைய தேசமாயிற்று” என்க.

இச்செய்திகளால், இராமாயண சரித்திரம் நடந்தேறுதற்கு முன்னர்; தண்டகாரணியத்துக்கு அகஸ்திய மஹரிஷி வந்தாரென்பதும், அவர்வருகைக்கு முன்பு இக்காடு வெறும் பாழ் வனமாயும் சில விடத்து அடர்ந்த பெருங்காடாயுமிருந்த தென்பதும், அம்முனிவர் இங்கு வரும்போது அநேக ரிஷிகளையும் அழைத்து வந்தாரென்பதும், அக்குறு முனிவரே இத்தேசத்தில் நல்லமழை நல்லநதி நன் மரங்கள் முதலியவற்றை உண்டாக்கினு ரென்பதும் புலப்படும்.

அகத்தியனுர் தெற்கே வருவதற்கு முன், இக்ஷுவாகு மைந்தனுகிய தண்டகன் சுக்கிர சாபத்தினுல் மண்மாரி பெய்ய மடிந்தகாலத்து அவன் ராஜ்யமும் மடிந்ததென்பது இராமாயணம் உத்தரகாண்டத்துக் கண்டது. இக்ஷுவாகுவின் மைந்தனுன தண்டகன் கொடியோனுய் விந்தத்துக்கும் சைவலத்துக்கும் இடைப்பட்ட நாட்டை ஆட்சி செய்து வருகையில், பார்க்கவ (சுக்ரன்) புத்திரியாகிய அரசையென்பாளைக் காதலித்து அவளை வலிதிற் கலந்த காரணத்தால் அங்ஙனம் சுக்ரசாபம் பெற்றனன் என்பது கதை.

தண்டகாரண்ய மென்பது, முற்காலத்தில், சேரசோழபாண்டிய நாடுகளை அடுத்திருந்த தென்பது, அந்நாடுகட்கும் விந்தத்துக்கு மிடையில் வேறு தேசங்களைக் குறியாது “விந்தத்தின் தெற்கே ஆயிரம் யோசனை யளவும் வெறுங் காடாய்க் கிடந்தது” என, வான்மீகி கூறுதலால் விளங்கும். ஸ்ரீராமபிரான் காலத்தில், அப்பெருவனந்தரத்தில் அங்கங்கே ருஷிகள் அநேகர் குடியேறி வசித்து வந்தனரென்பதும், அப்பிரதேசம் ஜனஸ்தானம் எனப் பெயர்பெற்றதென்பதும் மேற்காட்டிய பிரமாணங்களே விளக்கும். “ஜனஸ்தானத்தில் போருண்டாகு மென்று சந்தேகித்தவனும் இலங்கைக்கரசனுமாகிய இராவணன், ஈசுவரனிடமிருந்து அடைதற்கரிய பிரமசிரமென்ற அஸ்திரத்தைப் பாண்டியன் பெற்றிருப்பது தெரிந்து, அம்மன்னனுடன் சந்தி செய்து கொண்டு இந்திரலோகத்தை வெல்லப் போனுன்” எனக் காளிதாசர் ரகுவமிசத்திற் கூறுவதால், அந்த ஜனஸ்தானமும் தமிழ்நாட்டுக்கு வெகு தூரமன்றென்பது பெறப்படும். இத்தண்டகாரண்யம், ஆரியமக்களால் மிகுதியுங் குடியேறப் பெற்ற பிற்காலத்திலும், அவ்வனத்தின் ஆதிப் பெயரே தன் பெயராய்த் தண்டகாரண்ய நாடென்றும் பெயர் பெறலாயிற்று. “பதிற்றுப் பத்”தின் ஆறுவதன் பதிகத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் செய்கைகளுள், “தண்டகாரண்யத்துக் கோட் பட்ட வருடையைத் தொண்டியுட் டந்து கொடுப்பித்து” எனவும், அதனுரையில் “தண்டாரணிய மென்றது ஆரிய நாட்டிலுள்ளதோர் நாடு” எனவும் வருதலால், தமிழ்நாட்டை யடுத்து அஃதிருந்ததும் பிறவும் உணர்க.

இத்தண்டகாரணியத்துக்குப்பின், வான்மீக

ஓடுகிற வெள்ளம் அணையில் நிற்குமா ?

முனிவர், ஆந்திர புண்டர சோழ கேரள பாண்டிய நாடுகளைக் குறித்துவிட்டு, பின்னர், மலய பருவதத்தின் சிறப்பையும் அம் மலையினின்று காவிரி நதி பிரவகித்தலையும் குறிப்பிட்டுள்ளார். மலய பர்வதம் என்பது, தென்கோடியிலுள்ள பொதியமலை மட்டுமென்றி, நீலகிரியும் குடகும் அடங்கிய "மேற்குத் தொடர்ச்சி மலை" ப்ரதேசமுமாம். இம்மலையினின்று தெய்வத்தன்மை வாய்ந்த காவிரி வெளியாவதையும் அம்மலையினுச்சியில் அகஸ்திய முனிவர் விளங்குவதையும் வான்மீகியார் கூறியுள்ளார். அகஸ்தியர் காவிரி யுற்பத்தியாகுமிடத்தில் வசிப்பதாக முனிவர் இங்கே கூறினும், ஆரணிய காண்டத்தில், கோதாவரிக் கரையிலுள்ள பஞ்சவடிக்கு (Nasik) இரண்டு யோசனை தூரத்தில் அகஸ்தியாசிரமமிருந்ததாகவும் அவர் கூறியிருக்கின்றார். இதனால் அக்குறுமுனிவர், "மேற்குத் தொடர்ச்சி மலை" முழுமைக்கும் உரியவராய்த் தென்னாட்டைக் காத்தருளியவர் என்பது விளங்கும். இனி வானர வீரர்களை நோக்கிச் சுக்ரீவன் வழி கூறும்போது 'அம்மலையினுச்சியில் மிகவும் தேஜோவானாய், சூரிய ஸமானராய் ருஷி சிரேஷ்டராய் உள்ள அகஸ்திய முனிவரையும் பாருங்கள். பிறகு, நிர்மலசித்தமும் மிகவும் ஞானவானுமான அம்முனிவரது ஆணை பெற்றுக்கொண்டு தாமிரபரணியைத் தாண்டுங்கள்" எனக் குறித்தவான் தென்னாட்டிற் புகுவதற்கு அகஸ்திய முனிவரது அநுமதி பெறுதல் அக்காலத்தில் அநுகூலமாயிருந்ததென்பதும் விளங்கும். இதனை நோக்கும்போது "குறுமுனிவர் இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து அவனை ஆண்டு (தென்னாட்டுள்) வாராமை விலக்கிப் பொதியின்கண் இருந்தனர்" என்ற நச்சினார்க்கினியர் கூற்று ஞாபகத்துக்கு வருகிறது. அக்காலத்து அரக்கராதியரால் தென்னாட்டு ஆரியர்க்கு நேரும் இடுக்கண் நீக்கி அநுகூலஞ் செய்தற்கு அகத்தியரே முன்னின் றுபகரித்தாராவ ரென்பதற்கு வடமொழி தென்மொழி பிரமாணங்கள் பல காட்டலாம். வான்மீகி பகவான், ஸ்ரீராமபிரான் லக்ஷ்மணரை நோக்கி அகஸ்தியாசிரமத்தைப் பற்றிக் கூறியதைக் குறிக்கும்போது, "அம்மகானுகிய அகஸ்தியர் தாம் இவ்வுலகத்துக்கு நன்மை செய்யும் பொருட்டு, இங்கிருந்த யமனுடைய உபத்திரவத்தை நீக்கி, இத்தென்றிசையையும் சுகமாக வசிக்கத்தக்க திசையாகத் தமது தவ வலிமையாற் செய்துவைத்தார்" எனவும், "எவரொருவருடைய மகிமையால், இன்றைக்கும் அசுரர்கள் இத்தென்றிசையைக் கண்ணெடுத்துப்பார்த்து உட்புக நடுங்குகின்றார்களோ, அவருடைய ஆசிரமம் அது; மகாபுண்ணிய மூர்த்தியாகிய அவர் இத்திசைக்கு வந்தது முதல், இங்கே அரக்கர்கள் தம் பகைமை நீங்கிச் சாந்த முள்ளவராய் விட்டார்கள். அவர் பெயரைக்கொண்டே இத்தென்சிசையும் அகஸ்தியர் திசை என்று வெகு சாந்தமான பெயர்பெற்று மூவுலகத்தும் பிரசித்தியடைந்து கொடியவர் அஞ்சும் திசையாக விளங்குகிறது" எனவும் ஆரணிய காண்டத்து 11-ம் சருக்கத்துக் கூறுதலால், மேற்கூறிய விஷயம் நன்கு வெளியாகும்.

இனி தமிழ் வரலாறுகளை நோக்குமிடத்து, முற்காலத்தே அரசர்களால் துன்ப நேர்ந்தபோது சோழனொருவன் "தூங்கெயிலெறிந்" தது, இக்குறு முனிவர் அருளினாலே ஆம் என்பது விளங்கும். இதனை,

> " உலகந்திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
> பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படஇய
> ஓங்குயர் மலையத் தருந்தவ னுரைப்பத்
> தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்"

என்னும் மணிமேகலை யடிகளிற் (காதை-க) காண்க. காந்தமன்என்னும் மற்றொருசோழன் பரசுராமரது கொடுமையினின்று தப்ப இம்முனிவரது பேரருளை நாடிய வரலாறு "அமர முனிவனகத்தியன்றனாது, துயர்நீங்கு கிளவியின் யான்றோன் றளவுங் ககந்தன் காத்தல்" என அந்நூலானே (22, சிறை செய் காதை; அடி,—35-37)" அறியலாம். இக்காந்த மன்னவன் பொருட்டே, காவிரியைச் சோனாட்டிற் பிரவகிக்கும்படி அவ்வகத்தியனார் செய்தாரென்பது,

> " செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
> கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
> அமர முனிவன் அகத்தியன் றனாது
> கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
> செங்குணக் கொழுகிய சம்பாபதி"

எனவரும் அந்நூற்பதிகத்தால் அறிக. (சம்பாபதி என்பது காவிரிப்பூம்பட்டினம்.) இதனுள், "அமர" முனிவனகத்தி யன்றனாது,

கரகங்கவிழ்த்த காவிரி என்பதனால், அகஸ்தியாசிரமமொன்று குடகுமலையில் இருந்தமை வலிபெறும். இவ்வாறே பாண்டியனுக்கும் அகத்தியனார் மிகவும் அருள் செய்தவரென்பது, "அகஸ்தியரால் பட்டாபிஷேகம் செய்யப்பட்ட பாண்டிய வமிசம்," "பாண்டிய வமிசத்துக்கு ஆதியில் ஆசாரிய ஸ்தானம் வகித்தவர் அகஸ்தியர்" என நூல்களிலும் சாஸனங்களிலும் காணப்படுவதால் அறியலாம். ஸ்ரீ காளிதாஸரும் "அகஸ்திய மாமுனிவர், இப்பாண்டியர் தமது அசுவமேத யாகத்தை முடித்து அவபிருத ஸ்நானஞ் செய்தவுடன், வெகு அன்போடும் இம்மன்னரிடம் வந்து 'தங்களுடைய ஸ்நாநம் சரிவர முடிந்ததா?' என்று கேட்கிறார்" என்று இரகுவமிசத்துக் (சருக்கம்-6, சுலோகம் 61) கூறுதல், அகஸ்தியர் பாண்டியர்க்குள்ள நெருங்கிய தொடர்பை விளக்கும்.

மேற்கூறிய அகத்திய முனிவர் வரலாறுகளை யெல்லாம் கூட்டிப் பார்க்குமிடத்து, அம்முனிவர் மேற்கொண்ட முயற்சி முழுதும், முக்கியமாக, ஜனப்பெருக்கமின்றிப் பெருங்காடாய்க் கிடந்த விந்தத்தின் தென்பகுதியில் ஆரியமக்களைக் குடியேற்றி, அப்பகுதியை நிலவளம் நீர்வள முடையதாக்கி, அன்னோர்க்கு வேண்டிய சௌகரியஞ் செய்து, விருத்தி செய்ததே என்பது நன்கு விளங்கும். பூமியின் வடபாகம் ஜன நெருக்கத்தின் மிகுதியால் தாழ்ந்தும் தென்பாகம் அஃதின்றி உயர்ந்தும் இருந்தவற்றைச் சமநிலைப்படுத்த வேண்டித் தேவர்களால் அகத்தியர் தென்றிசைக்கு அனுப்பப்பட்டார் என்று புராணங்கள் கூறுவதில் உண்மையுளதேல், அது தென் பகுதியில் அம்முனிவர் மேற்கொண்ட குடியேற்ற முயற்சியே யன்றிப் பிறிதன்றாம். இதற்கேற்ப, தென்றிசைக்குப் போதுகின்ற அகத்தியர், "துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண், பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொடுபோந்து காடு கெடுத்து நாடாக்கி"ச் செழிக்க வைத்தார் எனத் தொல்காப்பியப் பாயிர வுரையில் நச்சினார்க்கினியர் குறித்த பழைய செய்தியும் பொருந்துமாறு கண்டு கொள்க.

இனி, விந்தியத்தின் தென்பாலுள்ள நாடுகளைக் குறித்து வந்த வான்மீகி முனிவர், "சோளாந் பாண்டியாந் ஸகோளாந்"—(சோழ தேசத்தையும் கோளத்தோடு கூடிய பாண்டிய தேசத்தையும்) என்று கூறுகிறார், "ஒருவினையொடுச் சொல்லுயர் பின் வழித்தே" என்னுந் தமிழ்வழக்குப்படி, 'கோளத் தோடுகூடிய பாண்டியம்' என்பது கோளதேசம் உயர்ந்த தென்பதைக் குறிக்குமாயினும், வடமொழி வழக்கு இதற்கு நேரெதிராகும்; என்னை? "ஸஹயுக்தே அப்பிரதானே" என்பது அதனிலக்கண மாதலின். அஃதாவது, "ஒரு வினையொடுச்சொல் இழியின் வழித்தே" என்பதாம். இங்ஙனம் 'பாண்டியாந் ஸகோளாந்' என அப்பிரதானத்தில் கோளநுக்கு 'ஓடு' கொடுத்திருத்தலால் வான்மீகி காலத்துப் பாண்டிய நாட்டுக் குள்ளடங்கிச் சேர நாடு இருந்தது போலும்!

இனி, மலயத்திலுள்ள அகத்திய முனிவர்பால் விடை பெற்ற பின்னர், தாமிரபர்ணி நதியைத் தாண்டும்படி கூறப்படுதலோடு, அந்நதி சமுத்திரத்துச் செல்லுமாறுஞ் சொல்லப்படுகிறது. அதன் பின்பு பாண்டியனது நகர விசேடம் வருகின்றது. இங்ஙனம், அந்நதி சமுத்திரஞ் சார்தலைக் கூறிப் பாண்டியன் நகர விசேடத்தை வான்மீகி குறித்தலால், அப்பட்டணம் தாமிரபர்ணியின் சங்கமத் தயலில் இருந்ததாகக் கருதத்தக்கது. "அதன் பின் சமுத்திரத்தை யடைந்து காரிய நிச்சயத்தைச் செய்யுங்கள்" என முடிவில் மகருஷி கூறுதலாலும், இதுவே கருத்தாதல் காணலாம். இனி இப்பாண்டியனது நகர விசேடத்தைப் பற்றி வால்மீகி கூறும் சுலோகத்தின் பொருள் வருமாறு:— "பிறகு, பொன் நிறைந்ததாயும் அழகுடைத்தாயும், முத்துமயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும், பாண்டியர்க்கு யோக்யமானதாயுமுள்ள கவாடத்தை வானர வீரர்காள்! பார்க்கக்கடவீர்" என்பது. இவ்வுரை, திலகர் தீர்த்தர் கோவிந்தராஜர் என்னும் இராமாயண வியாக்கியாதாக்களுள் பின்னவர் கூறியது. முன்னவ ரிருவரும் "பின்பு பொன்னிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்துமணி யிவற்றால் அணியப்பெற்றதாயும் நகரத்தரணோடு இணைக்கப்பெற்றதாயுமுள்ள பாண்டியர் வாயிற்கதவை வானரர்காள்! போய்க் காண்பீர்" என்னும் பொருள் படக் கூறினர். (தொடரும்.)

ஓந்தி வேலிக்கு இழுக்கின்றது, தவளை தண்ணீருக்கு இழுக்கின்றது.

## கன்-ப்-யூஷஸ்

**CONFUCIUS**

(271-ம் பக்கத் தொடர்ச்சி)

**மேன்மகனும், அறமும்.**—செய்யக்கூடிய விஷயங்களைப்பற்றியே சிந்தித்து உரைப்பவனும், பேசுமுன் செய்பவனும், எவரிடத்தும் சமமாகப் பழகுபவனும், சுக தசையிலும், கஷ்ட நிலையிலும், நீதி நெறிகள் வழுவாது நடப்பவனும், நியமங்களை அறிந்து அபிமானம் அல்லது பக்ஷபாதம், துவேஷம் அல்லது விரோதம் முதலியவைகளாற் கவரப்படாது முறைப்படி காரியங்களைச் செய்து வருபவனுமே மேன்மகனெனவும், மெய்யறிவாளனெனவும் அழைக்கப்படுவன். வார்த்தையாடுவதில் மதியூகி மெதுவாயிருப்பினும், விதித்தவைகளைச் செய்வதில் துரிதமாகவேயிருப்பான். கபடமற்றவனாகவும், சத்தியமுடையவனாகவும், அகந்தை யில்லாதவனாகவும், அகத்திலும் புறத்திலும் ஒரே தன்மையுடன் நடப்பவனாகவும், டம்பம், பயம், வீண் பச்சாத்தாபம் முதலானவைகளில்லாதவனாகவுமிருப்பவனே சுசீல னெனப்படுபவன். தற்புகழ்ச்சி, ஆக்ரஹ வார்த்தை, பேராசை முதலியவைகளில்லாதும், சிரத்தை, ஊக்கம், பொறுமை, தன்னடக்கம், அன்பு, தூய்மை, வாய்மை அல்லது நேர்மை முதலியவைகளையே சிரோபூஷணமாகக்கொண்டு மிருப்பவனே மேலோன். இதரர்களின் தீக்குணத் தீச்செய்கைகளை ஒருபொழுதும் ஒருவனிடமும் உரையாது, அவர்களுடைய நற்குண நற்செய்கைகளை மாத்திரம் வெளியிடுவோன் பேரறிவினேன். பிறர் நன்மையே பெரிதெனக்கொண்டு பொருளீட்டி உழைத்து வருவான் பெருமகன். ஒவ்வொன்றையும் உற்றுப் பார்த்துத் தீர ஆலோசித்து அறிவதற்கும், ஸ்பஷ்டமாய்க் கேட்டறிவதற்கும் பேராவலுடையவனும், அன்பு நிறைந்த பார்வையும், கண்ணியம் நிறைந்த ஒழுக்கமு முடையவனும், உண்மையும் நன்மையும் பொருந்திய விஷயங்களைப் பற்றியே சம்பாஷிப்பவனும், காரியங்களை நிறைவேற்றுவதில் சிரத்தையும், ஊக்கமுமுடையவனும், சந்தேகங்கள் தோன்றும் பொழுது, மீண்டும் அவைகளைச் செம்மையாக ஆராய்ந்தறிந்து அச்சந்தேகங்களை விலக்கிய பின்னரே மேற்காரியங்களைச் செய்யுங் குணமுடையவனும், 'யான்' 'எனது' என்ற பற்றைத் துறந்தவனு மிருப்பான் சான்றோன். மேன்மகன் ஒருபொழுதும் வாதாடான். இங்ஙனஞ் செய்ய நேரிடுமாயின், விவேகத்தையும், உண்மையையும், நியாயத்தையும், பொறுமையையுங் கைவிடாது வார்த்தையாடி உண்மையை ஸ்தாபித்துத் தவறுபவர்களை நல்வழியிலிடுவதற்கே முயல்வான். இம்முயற்சியில் தோற்பனுயின், அவன் அதை ஒரு பொருட்டாக எண்ணமாட்டான். ஆங்காரம், ஆவேசம், பழிக்குப்பழி செய்யவேண்டுமென்ற எண்ணங்களால் மேற்கொள்ளப்படவுமாட்டான்.

நடுநிலையில் மனதை நிறுத்திக் காரியங்களைத் தீர ஓர்ந்தறிந்து செய்தலே உண்மை அறத்தின் குணநிசயம். ஒருவன் தன்னுடன் பிறர் எங்ஙனம் ஒழுகிவர வேண்டுமென விரும்புகின்றானே, அங்ஙனமே தானும் இதரர்களுடன் நடக்க வேண்டுமென்பதே அறம். தர்மத்தைத் துறந்து ஜீவிப்பதைவிட உயிரை யிழப்பதே நலம். அறந்தங்கியவனே தன் புத்தி சாமர்த்தியத்தினுலும், கல்விவளப்பம், செருக்கின்மை, தன்னடக்கம், தன்னம்பிக்கை முதலியவைகளினுலும் பிறரைச் சன்மார்க்கத்திலிட்டுச் சுகிக்கச் செய்யும் சக்தியை யுடையவன். தவறுதல் இயற்கையானும், ஒரு முறை தவறினல், அதைத் திருத்தி மீண்டும் அப்பிழையிலாவது, அல்லது வேறு எப்பிழைகளி லாவது விழாதிருத்தலே உண்மை ஞானத்தின் இயல்பு. கூரையில்லா வீடு, வீடாகாதவாறுபோல், அறந்தங்காவுலகு உலகன்று. அறமே மிக்க மேலான செல்வம்.

இளமைப் பருவத்தில் துன்மார்க்கத்தில் மனதைச் செலுத்தல், மத்தியப் பிராயத்தில் வீண் சண்டைகளிற் பிரவேசித்தல், முதிய வயதில் பேராசையினுற் கவரப்படுதலாகிய இம்மூன்றும் தகாதவை.

நற்புத்திகளைக் கேட்டுத் தக்கபடி நடவாதவனும், வருபவைகளை முன்னறிந்து கிரமப்படி நடக்க ஆயத்தப்படாதவனும் மனிதனல்லன்.

மானமுடையவன் பிறரால்மதிக்கப்படுவான். பெருந்தன்மையும், உண்மையும் பொருந்திய

ஒக்கப் பிறந்த தங்கை ஓலமிட்டு அழச்சே, ஒப்பாரித் தங்கைக்குச் சிற்றுடையாம்.

வன் நம்பப்படுவான்; விவேகமும், தயாள குணமும் உள்ளவன் பிறரைத் தன் வசப்படுத்தலாம்.

ஐயம் நிரம்பிய விஷயங்களைப்பற்றி நிச்சயித்தலும், அபாயமும், துன்பமும் நிறைந்த காரியங்களில் தலையிடுதலும் இழிவானவை. கடந்து போனவைகளைப் பற்றி ஆலோசிப்பதும், தர்க்கிப்பதும், திருத்தக் கூடாதவைகளைப் பற்றியும், அறியாதவைகளைப் பற்றியும் வழக்கிடுதலும் இழிவான செய்கைகளாகும்.

உதாரகுணம் கர்வத்தை உண்டுபண்ணும்; உலோபகுணம் பிறரிடம் வெறுப்பை உண்டாக்கும். ஆதலால், இவைகளினின்று ஒவ்வொருவனும் தன்னைச் சரியாகப் பாதுகாத்து வரவேண்டும்.

தகாத காலத்தில் பேசுதல், சரியான சமயத்தில் (அதாவது பேச வேண்டியபொழுது) மௌனஞ் சாதித்தல், பிறர் நோக்கங்களைச் சிறிதேனும் பாராட்டாது இஷ்டப்படி வார்த்தையாடல், பெரியோரைத் தூற்றல், எளியாரைப் பழித்தல் ஆகியவைகளினின்று மேன்மகன் விலகுவான்.

அறமில்லாது (அதாவது நற்குண நற்செய்கைகளில்லாது) தைரியமாத்திர முடைய தனவான் நாட்டிற்கழகல்லன்; அறமில்லாது ஆண்மை மாத்திரம் பொருந்திய சாமான்யன் திருடனைவிடச் சிறந்தவனல்லன். தைரியமும், உண்மையும் பொருந்தியவர்போல் புறத்தில் நடித்து, அகத்தில் பயமும், பொய்யும் நிறைந்துள்ள மாந்தர்கள் இரவில் களவுசெய்யும் திருடர்களுக்கு ஒப்பானவர்கள்.

அநியாயமாய் அபகரிக்கப்பட்ட பொருளும், துஷ்கிருத்தியங்களாற் கிடைக்கப்பட்ட ஊழியமும் மேகத்திற் கொப்பாகும்.

**கல்வியும், ஞானமும்.**—கற்பதும், கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்றபின், அவைகளால் தெரிவிக்கப்பட்ட வழிகளில் நிற்பதுமே மெய்யறிவு. ஆழ்ந்த சிந்திப்பினால் வளராத கல்வி வீண்; கல்வியினால் ஒழுங்குபடுத்தப்படாத சிந்தனைகள் அபாயகரமானவை. கல்வி நிரம்பியவிடத்தில், ஜாதிபேதம், செருக்கு, அவமதிப்பு, பொறாமை முதலியவைக ளிரா.

உண்மை விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்ப மாத்திர மிருப்பதைவிடச் சடுதியில் அவைகளை அறிதலே மிகச் சிறந்தது; அறிந்துமாத்திர மிருப்பதைவிட அவைகளை அனுசரித்துப் பிறர்க்கும் நன்மை செய்தலே அதிலும் மேலானது.

தெரிந்தவைகளை அறிந்ததாகவும், அறியாதவற்றை அறியவில்லையெனவும் நிர்ணயித்தலே உண்மை ஞானத்தின் சிறப்பு.

ஸ்வயஞானம் பொருந்தியவர் மிகச் சிறந்தவர்; பின். ஸ்வயஞானமில்லாவிடினும், கல்வியினாலும், விடாமுயற்சியினாலும் அதைப் பெற்று வளர்ப்பவர் மேலாவார்; பின், மூடரானாலும், கற்கவேண்டுமென அவாவி முயல்பவர் சிறந்தவ ராவார்; ஆனால், ஞானத்தைப் பெற ஆசை யில்லாதவர்களும், பெற்று விருத்தி செய்ய யத்தனியாதவர்களும் கடையராவார்.

பணிவு அல்லது தாழ்மையும், ஸ்திர புத்தியும், விடாமுயற்சியும், சித்தசுத்தியும் கற்பதற்கு இன்றியமையாதவை.

கல்வியினால் செம்மைப் படுத்தப் படாத உண்மை நேசம் (அதாவது, உண்மை விஷயங்களை அறிந்து நற்காரியங்களைச் செய்து வரவேண்டும், பிறரிடத்து நேர்மையுடன் பழகி வரவேண்டும், என்ற விருப்பம்) மூடமென்ற நிழலை (அதாவது களங்கம், அல்லது குற்றம்) உண்டாக்கும்; கற்க விருப்பமில்லாது ஞானியாகவேண்டுமென்ற விருப்பம் மாத்திரம் சஞ்சலமென்ற நிழலை உண்டுபண்ணுகின்றது; கல்வியினால் சீர்படுத்தப்படாத நிஷ்கபட (நேர்மை) நேசம் முரட்டுத்தனம் என்ற நிழலை விளைவிக்கின்றது; கல்வியினால் ஒழுங்கு படுத்தப்படாத வீரநேசம் கலகமென்ற நிழலைப் பரவச்செய்கின்றது.

தன்னடக்கமில்லாவிடில் மரியாதை கெடும்; தன்னம்பிக்கை யில்லாவிடில் அறிவு சீழடையும்; தைரியம் உபயோகப்படாது. அறம் சுருங்கும் (அதாவது, குறைந்து, மறைந்து போம்).

**நட்பு.**—நேர்மை, நியாயம், ஊகம், ஊக்கம் முதலியவைகளை உடையவர்களுடன் மாத்திரம் நட்புக்கொள்ளுதல் தகுதி. நம்மைவிட எவ்விதத்திலாவது சிறந்தவருடன் அல்லது எல்லாவற்றிலும் சமமானவர்களுடன் மாத்திரம் சிநேகஞ் செய்தல் நல்லது. நாம் இதரர்களுடன் பழகும்பொழுது, சீரியரின் குணநடத்தைகளை நன்கு அறிந்து, நாமும் அங்ங

ஒடிந்த கோல் ஆனாலும், ஊன்றுகோல் இருக்கவேண்டும்.

னமிருக்க முயலவேண்டும்; கீழ்மக்களின் தீய வொழுக்கங்களையும், கெட்ட குணத்தையும் அறிந்து, அவைகள் நம்மை அண்டாது பாது காத்துக்கொள்ளவேண்டும். சான்றோர்களை நாம் பார்க்கும்பொழுது,குணம் நடத்தைகளில் அவர்களை மீறி மேற்செல்லப் பிரயத்தினஞ் செய்யவேண்டும்;பண்பிலாரைக்காண்கையில், நம்மிடமும் அத் தீயவைக ளிருக்கின்றனவா வென ஆராய்ந்தறிந்து,உளவாயின், அவைகளை விலக்கவேண்டும். அறமும், ஞானமுமுடை யவன் அநேக நண்பர்களை யடைவான்.

மணமும், இல்வாழ்க்கையும்.—இல்வாழ்க் கையே மிகச் சிறந்தது. மணம்புரிதல் இயற் கை நியாயம். இதே பற்பல சுகங்களை அநுப விப்பதற்கும், அறத்தை மேலோங்கி வளரச் செய்தற்கும் மூலாதார மாகின்றது. புருட னும், மனைவியும் ஒத்த மனதுடன் கூடியிரு ந்து வருவார்களாயின், இதைவிடப் பெரும் பேறு வேறொன்றுமில்லை. பரஸ்பர அன்பும், விசுவாசமும், நேர்மையும, ஒருவரை மற்றவர் நன்கு அறிந்து ஒத்து நடக்குங் குணமும் பொருந்திய இல்லவனும் இல்லவளுமே இதரர் களாற் புகழப்படுவர். அவர்கள் எக்கஷ்டமு மில்லாது ஜீவித்து வரலாம்.

சிறுவயதில் பெண்கள் பெற்றோர்களுக்கு அடங்கி யிருக்கவேண்டும். விவாகமானபின் நாயகனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். கணவன் மரித்தபின் பிள்ளைகளால் ஆதரிக்கப் பட்டு வரவேண்டும்.

விதவை மீண்டும் கலியாணஞ்செய்துகொள் ளல் நியாயமன்று. விதவை நிலைமையை யடைந்தபின் ஒருபொழுதும் வீட்டிற்கு வெளி யிற் செல்லக்கூடாது; கற்புநிலை தவறி நடத் தல் தகாது.

குற்றவாளிகளும், தீராப் பிணியர்களும் மணம்புரிந்துகொள்ளக் கூடாது.

புருஷன் தன் மனைவியைக் குரூரமாக நடத்தக் கூடாது; தவறும்பொழுது, இனிய புத்திமதிகளை உரைத்து, அன்புடன் ஆத ரித்து வரவேண்டும்.

புருஷனுடைய பெற்றோர்களிடம் சரியாக நடவாமல், மலடியாயும், துன்மார்க்கங்களில் மனதைச் செலுத்துகின்றவளாயும், குடும்ப ரஹஸ்யங்களை அயலாரிடம் வெளிப்படுத்து கின்றவளாயும், அருவருப்பை விளைவிக்கும் நோய்களால் வருந்துகின்றவளாயும், வீட்டுச் சாமான்களைத் தன் உறவினர் அறியாது விற் பவளாயுமுள்ள மனைவியை அவன் விலக்க லாம். ஆனல், கலியாணத்திற்குமுன் வறி ஞனயிருந்து பின் மனைவியின் அதிர்ஷ்டத் தினல் சீமானானபொழுதும் உறவினர்களை யிழந்து இருப்பதற்கு வேறோரிடமுமில்லா திருக்கும் பொழுதும், புருஷனது இருமுது குரவர் மரித்து மூன்று வருடம் முடியாதிருக் குமுன்னும், எக்காரணத்தை யிட்டும் கண வன் தன் மனைவியைப் பிரித்தல் தகாது.

பெற்றோர்களும், பிள்ளைகளும்.—பெற் றோர் பிள்ளைகளை அன்புடன் ஆதரிக்கவேண் டும்; பிழையிழைக்கும்பொழுது மன்னித்து நற்புத்திகளைப் புகட்டி நல்வழிப்படுத்தவேண் டும்; கல்வி கற்கச் செய்யவேண்டும். பிதா விவேகமும், நற்குண நன்னடத்தைகளும் பொருந்தியவனு யிருக்கவேண்டும்; இல்லா விடில், புத்திரர்களும், புத்திரிகளும் கீழ்ப் படிந்து நடவார்கள்.

சிறுவர் இதரர்களுடன் மரியாதையுடனும், அன்புடனும் பழகி வரவேண்டும். சுசிலரின் நட்பைப் பெறவேண்டும். ஞான விஷயங்க ளில் மனதைச் செலுத்தி உழைத்துவரவேண் டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்க்குக் கீழ்ப் படிந்து நடக்கவேண்டும்; அவர்களுடன் வீணில் வாதாடக் கூடாது. இயன்றவரை யிலும் பெற்றோர் இஷ்டத்தை அநுசரித்தே நடக்கவேண்டும்.

ராஜதர்மம.—அறந்தங்கிய இறைவன் துருவ நக்ஷத்திரம்போல் விளங்குவான்.

பிரஜைகளை நல்வழிப்படுத்திச் சுகிக்கச் செய்வதற்கும், நீதிநெறிகளினின்று வழுவாதி ருக்கச் செய்வதற்கும், அரசன் நீதிமானுக வும், மதியூகியாகவும், பொறுமை, விவேகம், ஊக்கம், சிரத்தை முதலியவைகளை யுடைய வனுகவு மிருக்கவேண்டும்.

அரசன் தான் செய்யவேண்டியவைகளைச் சரியான காலங்களில் செய்தும், தவறுபவர் களை இன்சொற்களால் சீர்திருத்தியும் இருந்து வருவானுனல், பிரஜைகள் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள்; தர்மநூல்களை மீறி நடவாது இனிது வாழ்வார்கள்.

யோக்கியர்களைக் கவனித்துப் பரிபாலித் தும், துஷ்டர்களை யடக்கித் தண்டித்தும்

வருவனாயின், பிரஜைகள் திருப்தியடைந்து அமைதியா யிருப்பார்கள். ஆனால், அயோக்கியர்களை உபசரித்தும், சுசீலர்களை நிராகரித்தும் வருவனாயின், குடிகள் அதிருப்தியடைந்து கலகமெழுப்புவார்கள்.

அன்பு, அருள், தூய்மை, நேர்மை, வாய்மை, சீரியவொழுக்கம் முதலியவைகளையுடைய அரசனே தன்குடிகளால் கௌரவிக்கப்படுவான். உண்பதற்கு வேண்டியவற்றை அளித்தலும், நாட்டைச் சரியாகப் பாதுகாத்து வருதலும், குடிகளின் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் வெல்வதற்குரிய மார்க்கங்களைத் தேடிப் பெறுதலுமே மாட்சிமைதங்கிய அரசனது லக்ஷணங்களாகும். இவனே செங்கோல் மன்னவனென அழைக்கப்படுபவன்.

ஜனங்கள் புல்லுக்கும், அரசன் காற்றிற்கும் ஒப்பாவார்கள். காற்றடிக்குந் திசையை நோக்கிப் புல் வளைவதுபோல், ஆள்பவனது குணம், நடத்தைகளின் பிரகாரம் பிரஜைகளும் நடப்பார்கள். "அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி."

அரசன் தன்கீழுள்ள உத்தியோகஸ்தர்களின் திறமையை அறிந்து, அவரவர்க்குத்தக்க வேலைகளைக்கொடுத்தும், அவர்கள் சிற்சில சமயங்களிற் செய்யும் சிறு குற்றங்களை மன்னித்தும், மதியூகிகளையும், முயற்சியுடையோர்களையும், பண்பினோர்களையும் நன்கு கவனித்து அன்புடன் பராமரித்தும் வரவேண்டும்.

செய்யக்கூடிய காரியங்களைப்பற்றியே சிந்திக்க வேண்டும். பிறர் அறியக்கூடிய விதத்தில் தன்னுடைய எண்ணங்களை வெளியிட வேண்டும். எண்ணங்களும், காரியங்களும் ஒத்திருக்கவேண்டும்; இல்லாவிடில் காரியங்கள் ஒழுங்குடன் செய்யப்படா; காரியக்குறைவினால் ராஜாங்கம் நன்றாக நடவாது; ராஜாங்கம் ஒழுங்காக நடவாவிடில், நேர்மையும் ஒற்றுமையுமிரா; நேர்மையும் ஒற்றுமையுமிராவிடில், நீதியும் நியாய சட்டங்களும் வியர்த்தமாக முடியும்; தர்மமில்லாத ராஜ்யத்தில், பயமும் கலகமும் அதிகரிக்கும்; கொலையும் களவும் விருத்தியாகும். அரசன் தாறுமாறாய் வார்த்தையாடல் கூடாது; செய்தற் கியலாத காரியங்களை நினைக்கக் கூடாது; இன்பமும், சுகமும் உண்டுபண்ணாத காரியங்களைச் செய்யக்கூடாது.

தன்னடக்கமில்லாத வேந்தன் பிறரை ஆள்வது மிகக் கடினம். சுயலாபம், சுயநன்மைகளைப்பற்றிச் சிறிதேனும் மனதில் வகியாத அரசனே மிக்க மேலானவன்.

முறையிட வந்தவர்களையும், யாசகர்களையும் நேரில் கண்டு கேட்டு, அவர்கள் குறையைத் தீர்க்கவேண்டும்.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்—இவ்வாறு குற்றங்களால் கவரப்படாது அரசன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

தர்மம் நிலைத்திருக்கும் நாட்டில், வறுமையிராது; திருப்தியும், சந்தோஷமும், ஒற்றுமையுமுள்ள விடத்தில், கலகமிராது. இத்தகைய நாடுகளை வேறெவரும் எதிர்த்து வெல்வது முடியாது.

அரசர்கள் வீணில் போர் செய்யக் கூடாது. அங்ஙனஞ் செய்வார்களாயின், ஜயிப்பதற்கே முயலவேண்டும்.

செங்கோலரசின்கீழ் வறுமையும், துக்கமுமிரா: கொடுங்கோலரசின்கீழ் ஐசுவரியமும், பெருந்தகைமையும் தங்கா.

நாடெங்கும் கலாசாலைகளை ஸ்தாபிக்க வேண்டும். பிரஜைகளைக் கற்கச் செய்தலே, அரசனுடைய முழுமுதற்கடமை. கல்வி நிரம்பிய விடத்தில், ஒற்றுமையும், நேர்மையும் தூய்மையும் வளர்ந்து வியாபிக்கும்.

**தன்னைப்பற்றிக் கூறியவைகள்.**—பதினைந்தாவது பருவத்தில், கல்விகற்க வேண்டுமென்ற ஆசை அதிகரித்தது. முப்பதாவது பிராயத்தில், திடமன முடையவனானேன். நாற்பதாவது வயதில், பிரமையினின்று நீங்கினேன். ஐம்பதாவது வருடத்தில், நூல்களைச் செம்மையாகக் கற்று முடித்தேன். அறுபதாவது ஆண்டில், உண்மையை அறிந்தேன். எழுபதாவது வயதில், போத நிலையையடைந்தேன்.

என் கொள்கைகளைக் கற்கப் பிரியமில்லாதவனுக்கு உபதேசிப்பதில்லை; சிந்திப்பவைகளையும், படிப்பவைகளையும் செம்மையாக வெளியிடச் சக்தி யில்லாதவனுக்கு நான் எத்தகைய உதவியும் புரிவதில்லை; விஷயத்தின் ஒரு பாகத்தைக் காண்பித்துப் புகட்டியபின், நுட்ப புத்தியினாலும், விடாமுயற்சியினாலும் மற்றபாகங்களையும் தானே அறிந்துகொள்ளத்

திறமையில்லாதவனுக்கு மீண்டும் நான் கற்பிப்பதில்லை.

சீமான் ஒருவன் கன்-ப்-யூஷஸைத் தன் கிரஹத்திற்கு வரும்படி வேண்டியபொழுது, இவர் அங்ஙனஞ்செய்ய உடன்பட்டார். அப்பொழுது, இவருடைய சிஷ்யர்களிலொருவன், "தீயோர் வீட்டில் புகுவதில்லையெனக் கூறியிருக்கின்றீரே. இச்சீமான் துராத்மாவென நீர் அறிந்தும், நீர் இப்பொழுது அவன் வீட்டிற்குப் போகச் சம்மதித்தது நியாயமோ?" எனக் கேட்டபொழுது, கன்-ப்-யூஷஸ் "யான் அங்ஙனம் கூறியது மெய்யே. வெண்மையும், தூய்மையும் நிரம்பிய வஸ்துக்கள், அசுத்த பதார்த்தங்களுடன் சேர்க்கப்பட்டபோதிலும், தம் இயற்கை சுவபாவங்களை யிழக்கா திருப்பதில்லையா? யான் சுவையைத் தணிக்கக்கூடாத கனிக்கு ஒப்பானவனா? திடமனமும், தூய ஹ்ருதயமும் பொருந்தியவர்கள் பிறர் கெட்ட குண நடத்தைகளுக்குக் கொஞ்சமேனும் அஞ்சவேண்டியதில்லை. அவனுடைய தீக்குணம் அவனிடமும், என்னுடைய நற்குணம் என்னிடமும் தங்கிவிடும்" என விடையளித்தார்.

வேறொரு சமயத்தில், கன்-ப்-யூஷஸின் சிஷ்யர்களி லொருவன், "தீமைக்குப் பிரதித் தீமை செய்தல் நியாயமா?" என வினவிய பொழுது, "நன்மைக்குப் பிரதி நன்மையும், தீமைக்குப் பிரதி நன்மையும் செய்தால், நன்மைக்கும் தீமைக்கும் வித்தியாச மொன்று மில்லையே. ஆதலால், நன்மைக்கு நன்மையும், தீமைக்குப் பிரதி தீமையும் செய்தலே உண்மையான நியாயம்" எனப் பதிலுரைத்தார்.

முடிவு.— ஞானக் கடலில் ஆழ மூழ்கி, நிகரற்ற முத்து மணிகளைக் கொணர்ந்து, ஓரிடத்தே குவித்து, எத்தேயத்தினரும், எக்காலத்தவரும் அக்குவியலையணுகி மகிழ்வுற்று, அதிலிருந்து அவரவர் திறமைக்குத் தக்கபடி விவேகமென்ற மணிகளை வாரி யெடுத்துச் சென்று, தமக்கும் பிறர்க்கும் நன்மை செய்யும் நிமித்தம் உதவின ஞானிகளில் ஒருவர் நமது கன்-ப்-யூஷஸ். ஞான நூற்களையும், தர்ம நெறிகளையும் செம்மையாகச் சகலருக்கும் புகட்டியவரும், புகட்டுபவருமான இவர் என்றும் சிதாகாயத்தில் ஓர் துல்லிய நக்ஷத்திரம் போல் விளங்குவர். ஆறாத் துயரக் கடலில் ஆழ்ந்துஅவதிப்பட்டு அலறும் பேதையர்களைக் கைதூக்கி நற்கரையிலிட்ட சீரியர்களில் ஒருவர் இவர். மிடி, பிணி, அழுக்காறு, அகந்தை கொலை, களவு, போர், மடி, மூடம் ஆகியவைகள் நிரம்பிய குழியில் வீழ்ந்து கூத்தாடும் பாமரர் பண்பிலார்களுக்கு முன், ஓர் ஒளிபோல் தோன்றி, அன்பு, அருள், சுகம், இன்பம், ஞானம் என்றவைகள் நிரம்பப்பெற்ற பெருங்கடலைச் சுட்டிக்காட்டி எப்பொழுதும் மறக்கக்கூடாத உதவியைச் செய்துவரும் பெரியோர்களில் ஒருவர் இவர். அஞ்ஞானமென்ற காரிருளாற் சூழப்பட்ட இப்புவியின்மீது ஞான விளக்கேந்திய கம்பத்தை நாட்டியவர்களிலொருவர் இவர். இப்பெரியோர்களின் எண்ணம், வாக்கு, காரியம் முதலியவைகள் ஒருபொழுதும் அழியா. எந்நாட்டில், எக்காலத்தில் பிறந்திருந்தாலும் சீரியர் சீரியரே. சதுரங்க சேனைகளுடன் பற்பல ராஜ்யங்களின் மேற் படையெடுத்துப் போர்புரிந்து, அதர்மமாய் ஆயிரக்கணக்கான மாந்தர்களைக்கொன்று இன்றிருந்து நாளை யழியும் மாகாணங்களை ஸ்தாபிப்பதைவிட, விவேகத்தினாலும், விடாமுயற்சியினாலும், பொறுமையினாலும். மூடம் அவித்தை யென்ற அந்தகாரத்தினால். மூடப்பட்ட உலகின்மேற் படையெடுத்து, அவ்விருளை நீக்கி, எந்நாளும் நீடித்து நிலை நிற்கும் ஞான வொளியைப் பரவச்செய்த லல்லவா மிகச் சிறந்தது! இவர் ஆஜானு பாகு; கம்பீரத் தோற்றமுடையவர்; திடகாத்திர முடையவர்; இனிய தொனியும், அகன்ற நாசியும், மேன்மைக் குணத்தையும் ஸ்திரபுத்தியையும் தெரிவிக்கும் முகத்தையும், ஞான முதிர்ச்சியினால் பிரகாசிக்கும் நேத்திரங்களையு முடையவர்; தமது அந்தஸ்திற்குத் தக்க உடை தரிப்பவர்; மதுபானம் முதலியவற்றை மிதமாக உபயோகித்தவர்; ருசிகரமானதும், தேக புஷ்டியைத் தரத்தக்கதுமான பதார்த்தங்களையே உண்பவர். அன்பு, அருள், இரக்கம், ஈகை, நிஷ்கபடம், கர்வமின்மை முதலியவைகளைச் சிரோபூஷணமாகக் கொண்டவர். பிறருடன் மிக்க மரியாதையுடன் பழகி வந்தவர்; பிறரைத் தூஷித்தவரல்லர். தம் சிஷ்யர்களை அன்புடனும் ஆசையுடனும் ஆதரித்து வந்தவர். அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முடியாத சித்தாந்தங்களைப் புகட்டியவரல்லர். அவைகளைப்பற்றிச் சிந்தித்தவருமல்லர்.

ஓதிய மரம் தூணாமோ? ஓட்டாங்கிளிஞ்சில் காசாமோ?

## தென் இந்தியாவில் தொழு எரு

## FARM MANURE IN SOUTHERN INDIA

அநேகமாய் எந்தத் தேசத்திலும் குடியானவனுக்குத் தன்னுடைய ஆடுமாடுகளின் மூலமாய்க் கிடைக்கிற எருவே அவனுடைய நிலத்தை உரமிடுவதற்கு ஆதாரமா யிருக்கிறது குடியானவன் தன் நிலத்தில் நன்றாக எருவிட்டு அதைச் செவ்வையாய் உழுதால்மட்டும் அதிலிருந்து நல்ல மாசூலை எதிர் பார்க்கக்கூடும்.

எருவிடுவதுவே அவன் அடையும் இலாபத்துக்குக் காரண மென்பது யாவருக்கும் அனுபவத்தில் தெரிந்த விஷயம். போதுமான எருவும் ஏராளமான தண்ணீரும் இருந்தால் இந்துதேசத்து நிலத்தின் விளைச்சலுக்கு வரையறை இல்லை. இந்த விஷயத்தில் எருவும் தண்ணீரும் ஒன்றிலொன்று சார்ந்திருக்கிறது. தண்ணீரோ பெய்கிற மழையினாலும், நதிகள், ஏரிகள் அல்லது கிணறுகளிலிருந்தும் கிடைக்கிறது. நாம் இப்பொழுது கவனிக்கவேண்டியது எரு உண்டாகும் விதத்தைப்பற்றியே. துர்ப்பாக்கியத்தால் சமுசாரியினுடைய கைவசத்தில் கிடைக்கிற எருவோ, வழக்கமாய் மிகவும் கொஞ்சம். அதுவும் அநேகமாய்த் தாழ்ந்த தரமுள்ளதே. கிடைக்கிற எரு விஷயமாய்ப் போதுமான கவனம் வைக்காமலும் சரியான விசாரணை இல்லாமலும் எருவின் சத்துக் குறைந்துவிடுகிறது.

எரி துரும்பு கிடைக்காத இடங்களிலும் பட்டணங்களுக்கு அருகிலும் மாட்டுச்சாணத்தின் அதிக பாகத்தை வறட்டியாகத் தட்டி விறகுக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள். குடியானவன் தன்னுடைய ஆடுமாடுகளின் சாணத்தை விறகுக்குப்பதில் கொளுத்திவிடும்பொழுது வெட்டவெளியில் அதாவது மழையில் நனைந்து வெயிலில் காயும்படி அதைக் கொட்டிவிடுகிறான். அப்படிச் செய்வதினாலே சாணத்தினிடத்துள்ளஉபயோகமுள்ள சத்துக்களெல்லாம் போய்விடுகிறது. ஆடுமாடுகளின் சாணத்தை எரிக்கிற வழக்கம் குடியானவனுக்கு அதிக நஷ்டத்தை உண்டுபண்ணுமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். மாட்டுச்சாணத்தை வறட்டியாகத் தட்டி உபயோகிப்பதனால் சமுசாரிக்கு மிகவும் கொஞ்சம் இலாபந்தான் கிடைக்கும். சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் செய்கிறது போல், குடியானவர்கள் தங்கள் வயல்களைச் சுற்றிலும் மரங்களை நட்டும் வேலிகளை வளர்த்தும் அல்லது தமது வயல்களின் ஒரு சிறு பாகத்தில் விறகின் நிமித்தம் மரங்களை வளர்த்தும் தமது தேவைக்குப் போதுமான விறகைச் சுலபமாய் அடைந்து கொள்ளக்கூடும். இப்படிச் செய்தால் தொழு எருவை எரித்து நஷ்டம் உண்டுபண்ணக்கூடிய துர்வழக்கம் நீங்கிப்போகும். பெரிய பட்டணங்களுக்கு அருகில் விறகின் விலை அதிகமாய் இருப்பதினால் விறகு கொடுக்கக்கூடிய மரங்களை வைத்து வளர்ப்பது மிகவும் இலாபகரமான முயற்சியா யிருக்கும். பொதுவாகக் குடியானவர்கள் தங்களுடைய மாட்டுச் சாணத்தை வெட்டவெளியில் சிறு குவியலாகப் போட்டு வைப்பது வழக்கமாயிருக்கிறது. அப்படிச் செய்வதனால் சாணம் கற்கள்போல் கட்டியாய் உலர்ந்து ஏதாவது ஒரு மழை பெய்தால் அதனால் முழுவதும் கரைந்து போகிறது.இப்படிச் செய்வதனால் ஒவ்வொரு விதத்திலும் நஷ்டமடைந்து கடைசியாகக் கழனியில் கொண்டுபோடுவதற்காக வண்டியில் எடுக்கும்பொழுது உபயோகமில்லாத சிறு செத்தைக் குவியலாக ஆகிவிடுகிறது. இந்தக் குவியலோடே வைக்கோலும் சில இலை தழைகளும் சேர்ந்திருக்கின்றன. அதில் சேர்ந்த ஒவ்வொரு பொருளும் சரியாய்ப் பாதுகாக்கப்படாமல் சாணம் அதன் குணத்தை இழந்தும், தாள்கள் வெயிலினால் சாராம்சங்கள் கிரகிக்கப்பட்டும் கெட்டியாய் விடுகின்றன. இந்தியாவில் ஆடுமாடுகளுக்குச் செத்தையினால் படுக்கை போடுகிறதில்லை. ஆடுமாடுகள் சொந்தக்காரர்களுடைய வீடுகளிலாவது தொழுவங்களிலாவது கட்டியிருக்கும் பொழுது அவைகளின் மூத்திரத்தைச் சேகரிப்பதற்கு யாதொரு முயற்சியும் செய்கிறதேயில்லை. மேற்கூறியபடி சாணம், செத்தை முதலிய கெட்டி உரங்கள், வெயில, மழை, காற்று முதலியவைகளில் அடிபடுவதனால் தற்காலத்தில் கையாடும் முறை, நஷ்டத்தை உண்டுபண்ணுவதா யிருக்கிறது. மேலும் மூத்திரம் முதலிய நெகிழ்ந்த உரம் சேகரிக்கப்படாமல் போவதுமல்லாமல் பூமி

ஒரு கட்டு வைக்கோலைத் தண்ணீரிற் போட்டு எட்டுஆள் கூடி இழுத்தாற்போல.

யில் ஆடுமாடுகளின் கால் குளம்பினால் உண்டாகும் பள்ளங்களுக்குள் சுவறிப் போகும்படி விடுவதினாலுண்டாகும் நஷ்டத்தோடு முன் கூறியதைப் பார்க்கிலும் அதிக நஷ்டமுண்டாவது மல்லாமல் கெடுதி விளைவிக்கக் கூடியதாயும் இருக்கிறது. ஏனென்றால் மாடுகள் நிற்கிற தரை, மூத்திரத்தினால் நிறைந்து வீடு அல்லது தொழுவத்திலுள்ள காற்று அசுத்தமாய் விடுகிறது. காலையில் இந்தத் தொழுவங்களில் ஒருவிதமான கெட்ட நாற்றம் உண்டாவது யாவருக்கும் தெரிந்த விஷயம். இதற்குக் காரணம் பூமிக்குள் போய் நஷ்டமாய்ப் போகிற மூத்திரத்திலடங்கிய அருமையான சத்துக்கள் ஆவியாய்ப் போவதுதான். சமுசாரிகளுக்கு அதன் அருமை இவ்வளவென்பது தெரியவில்லை. வாஸ்தவமாகவே மாட்டு மூத்திரத்தில் சாணத்திலிருப்பதைப் பார்க்கிலும் சடப் பொருள்களைச் செழிப்புண்டாக்குந் தன்மை அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட மூத்திரத்தை விருதாவாய்ப் போகும்படி செய்வது மிகுந்த நஷ்டமேயாம். இவ்விதமான நஷ்டத்தை இரண்டு வழியாய் நீக்கலாம்.

முதலாவது, மூத்திரத்தை இழுத்துக்கொள்ளும்படியான செத்தைப் படுக்கையை உபயோகிப்பதனால்; இரண்டாவது, செத்தை அகப்படாவிடின் காய்ந்த மண்ணைத் தொழுவத்தின் தரையில் பரப்புவதனால். இரண்டாவது சொன்ன முறையினால் மூத்திரத்தின் அநேக பாகத்தை, வீண்போகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். எப்படியெனில், உரத்துக்காக உபயோகப்படும் வரையிலும் தொழுவில் பரப்பின மண்ணைச் சேகரித்து வைக்கவேண்டும்; அல்லது மூத்திரத்தினால் மண் கலப்புண்டவுடனே அதை அவ்விடத்திலிருந்து நீக்கி பின் சொல்லுகிறபடி எருக்குழியில் ஜாக்கிரதையாகச் சேகரித்து வைக்கவேண்டும். வயல்களில் ஆடு மாடுகளைக் கிடைமறிக்கும்பொழுது தரையில் உறைந்துபோகும் மூத்திரம் வீண் போகவில்லை.

மாடுகளுக்கு ஏன் செத்தைப்படுக்கை உபயோகிக்கிறதில்லை யென்று குடியானவனைக் கேட்டால் "அவைகளுக்குச் சரியானபடி தீவனம் போடுவதற்குப் போதுமான தீனி இல்லையே! இதில் படுக்கைக்கு உபயோகப்படுத்த வைக்கோலுக்கு எங்கே போகிறது?" என்றுமாமூலாய்ச் சொல்லுகிறான். எருக்குவியல்களில் கலந்து காணப்படுகிற ஏராளமான கழி கூளங்களே இது சரியான முகாந்தரமில்லை யென்பதற்குப் பலமுறை சாட்சியமாகும். ஏனென்றால் இவைகளையும் கோரைப்புல்லையும், களைப் புல்லையும், தழைகளையும் இன்னும் சகலவிதமான குப்பை கூளங்களையும் செத்தைப் படுக்கையாக உபயோகப்படுத்தலாம். தொழுவின் தரைமேல், காய்ந்த மண் தூவப்பட்டால் படுக்கைச் செத்தை ஜாஸ்தியாக வேண்டியிருக்காது.

முன் சொல்லியிருக்கிறபடி, தொழு எருவின் அதிக அருமையான பாகம் மாட்டு மூத்திரமே. சரியானபடி சேகரிக்கப்பட்ட உரத்தில் பூராவாகச் சாணமும், மாட்டுப் படுக்கைக்காக உபயோகப்படுத்தப்படுகிற செத்தையும் அடங்கியிருக்கிறது. அது செத்தையினாலும், நிலத்தின் விளைவைச் சாப்பிடுகிற பிராணிகளின் மல மூத்திராதிகளினாலும் ஆக்கப்பட்டதால் அது தானே நிலத்தைக் கொழுக்கப்பண்ணுகிற பூரணமான செழிப்பாளியாயிருக்கிறது. நல்ல உரத்தை உண்டுபண்ணுவதில் அந்தப் பதார்த்தங்களெல்லாம் ஒன்றோடொன்று நன்றாகக் கலந்திருப்பதுவும், அவைகளைச் சேகரித்ததன் பிற்பாடு ஜாக்கிரதையாகப் பாதுகாப்பதுவும் முக்கியமான விஷயம். இப்படிச் செய்வதனால் இவைகளெல்லாம் அழுந்திச் சாவதானமாய் நன்றாக மட்கிவிடுகின்றன. தொழு எருவின் அருமை, அதில் நிலத்தைச் செழிப்பிக்கும் பொருள்களிருப்பதனால் மாத்திரமல்ல; அதை உபயோகிக்கும் நிலத்தில் அது உண்டாக்கும் மாறுதல்களினாலும் தெரியவரும். அம்மாறுதல்கள் அநேகமாக நாம் உபயோகிக்கும் உரம் எவ்வளவு மட்கியிருக்கிறதோ அதைப் பொருத்திருக்கின்றன. குடிகள் இருக்கும் நிலைமைக்கு ஏற்பச் செவ்வையாய்த் தொழு எரு உண்டாக்கும் விதம் கீழே விவரித்திருக்கிறது. இந்த விதமாய்ச்செய்வதில் சாணம், மூத்திரம் இவைகளைச் சில மாதங்களுக்குப் பிறகுதான் எருவேண்டியிருக்கும்போது அப்புறப்படுத்துவார்கள். பெய்த மூத்திரம், போட்ட படுக்கையில் சுவறியிருக்கும்.

மாட்டுத்தொழுவின் அடித்தரையைச் சுற்றி

யிருக்கும் மட்டத்திற்கு இரண்டு அல்லது மூன்று அடி தாழ்த்தித் தரைக்கும் பக்கங்களுக்கும் களிமண் பூசவேண்டும். பிறகு தரையின்மேல் எப்பொழுதும் உதவும்படி கொஞ்சம் சாம்பல் தூவி தினந்தோறும் செத்தை குப்பைகளை மாட்டிற்குப் படுக்கையாகப் போடவேண்டும். மாட்டுக்கும் ஆளுக்கும் வேலையில்லாது சும்மாவிருக்குங்காலத்தில் தழை, கோரை முதலியவற்றைப் படுக்கைக்கென்று சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். ஆடுமாடுகள் தின்று கழித்த வைக்கோல் முதலியவைகளையும், விளைந்து அறுத்துத் தள்ளும்படியான பயிர் செடியின் பாகங்களையும், மணி நீங்கிய கதிர்களையும் படுக்கையாகப் போடலாம். ஒரிணை மாட்டுக்குத் தொழு 10-அடி நீளமும் 6-அடி அகலமும் இருக்கலாம். தொழுவின் எல்லாப் பக்கத்திலும் நடந்து எரு மிதிபடும்படி மாட்டை விட்டுவிடவேண்டும். எரு அழுத்தப்படாவிட்டால் சீக்கிரம் அழுகிக் கொதிப்புண்டாகிக் கெட்ட நாற்றம் வீசும்; மாட்டுக்கும் சௌக்கியம் குறைவுபடும். தினந்தோறும் காலைநேரத்தில் முதல் நாள் இராத்திரிப் போட்ட சாணத்தைச் சமமாய்த் தொழுவில் பரப்பி அதன்மேல் கொஞ்சம் படுக்கைச் செத்தையைத் தூவவேண்டும், இவ்விதமாய் மூன்று மாதத்திற்குள் பள்ளம் நிரம்பி எருச் சேர்ந்துபோம். படுக்கைச் செத்தையை அதிகமாய்ப் போட்டால் எருவின் தரம் குறைவதுமன்றி அதி சீக்கிரமாய் மட்கியும் போகும். எரு அதிகமாகக் காய்ந்து மெள்ள மட்கமாட்டாதாகையால் அதன் யோக்கியதை குறைந்துபோம். குழியில் போட்டிருக்கும் எரு முழுவதிலும் எப்பொழுதும் ஈரம் இருந்து கொண்டேயிருக்கவேண்டும். அதனால் நிலத்தில் தண்ணீர் நில்லாமல் வறட்சியுண்டாகும். எருவை அப்புறப் படுத்தும்போது எருச் குவியலில் எந்த இடத்திலாவது சாம்பல் நிறம் உண்டாயிருந்தால், எரு அந்த இடத்தில் அதி தீவிரமாய் மட்கினதற்கு அடையாளம். இதற்கு ஈரம் போதாமல் அதிகக் கொதிப்புண்டாவதே காரணம். படுக்கைக்கு இட்ட வைக்கோல் முதலியவை நீளமாயும் கெட்டியாயும் இருந்தால், சரிவர எரு மட்காது. ஆகையால் படுக்கைச் செத்தையைத் துண்டித்துப் போடவேண்டும். எருச் செவ்வையாய் மட்கியிராவிட்டால், எருவின் குணம் மண்ணுக்குக் கிடைக்காமல் பயிருக்கு எரு பயன்படுகிறதில்லை. எரு செவ்வையாய் உண்டாக்கினால் அது நிறம் கறுத்தும், மிருதுவாயு மிருக்கும். ஒரு கத்தியினால் வெட்டக் கூடியதாக முழுவதும் மட்கியுமிருக்கும். தொழுவிலிருந்து எரு வாரிக்கொள்ளும்போது மேலேயிருக்கும் மட்காத பாகத்தை ஒரு பக்கமாய் ஒதுக்கிவைத்துச் செவ்வையாய் மட்கின எருவெல்லாம் எடுபட்ட பிறகு ஒதுக்கின செத்தையை அடியில் பரப்பி முன்போல் மென்மேலும் எருச் சேர்க்கலாம்.

மேலே காட்டிய விதமாய் எரு உண்டாக்கினால் வருஷம் ஒன்றுக்கு மாடு ஒன்றுக்கு 5-முதல் 7-டன் * நிறையுள்ள எரு சேரும். சாணத்தை வெட்டவெளியில் அடர்த்தியின்றிக் குவித்துவைத்தால் அரை டன் எருவிற்கதிகம் அகப்படாது. எருவும் நல்ல எருவாகாது. மேலே காட்டிய விதமாய்த் தொழு எரு உண்டாக்குவதற்கு இரண்டு ஆக்ஷேபம் சொல்லுகிறார்கள். அவை.—

(1) இப்பேர்ப்பட்ட மாடுகளுக்கு நோய் உண்டாகின்றது

(2) படுக்கைச் செத்தை வெகு அதிகமாய் வேண்டியிருக்கின்றது

என்றவைகள்தாம், இரண்டாம் ஆக்ஷேபத்திற்கு நாம் சொல்லவேண்டியது ஒன்று உண்டு. தென் கன்னடத்தில் சிலபாகங்களில் குடியானவர்கள் மாடுகளுக்குப் படுக்கைக்கென்று புல் தழை முதலியவைகளை வெகு சிரமப்பட்டுச் சேர்க்கின்றார்கள். சில நாட்களுக்கு ஒரு தடவை எருவை அப்புறப் படுத்திப் பதிவான ஓரிடத்தில் கொட்டுகிறார்கள். வண்டிகள் குறுக்கும் நெடுக்குமாய் அதன்மேல் ஓடுவதால் செத்தை அமுங்கிப்போம். முதல்காட்டிய ஆக்ஷேபம் ஒப்புக்கொள்ளத் தக்கதல்லவென்று அநுபவத்தால் தெரிகிறது.

எந்த நியாயங்களை யிட்டாவது மேலே காட்டியபடி எரு சேர்க்கமுடியாதானால் பின்வருமாறு செய்யலாம். மாட்டுத்தொழுவின் அடித்தரையைச் சமமாகக் கெட்டித்து ஒரு பக்கம் வாட்டஞ் செய்து, வாட்டமான ஓரத்தில் ஒரு கால்வாய் உண்டாக்கிவிட்டால் மாடுபெய்யும் மூத்திரமெல்லாம் கால்வாய் வழியாய் வடிந்

* டன் என்பது சுமார் இரண்டுவண்டி பாரம்-

தோடி வெளியில் ஒருமூலையில்வைத்திருக்கும் ஒரு பானையில் போய்விழும். வெளியில் ஒரு குழி தோண்டி அதன் அடித்தரைக்கும் பக்கங்களுக்கும் களிமண் பூசி அதன்மேல் ஒரு தாழ்ந்த சிறு கூரைக் கொட்டம் போட்டு வைத்து இந்தக் குழியில் தினந்தோறும் தொழுவத்துச் சாணத்தைக் கொண்டுபோய்ப் போடவேண்டும். கழித்த புல், செத்தை எது கிடைக்குமோ அதைக் குழியில்போட்டுஅதன் மேல் தினந்தோறும் பானையில் சேர்ந்திருக்கும் மூத்திரத்தை ஊற்றவேண்டும். சாணி, மூத்திரம், செத்தை இவையெல்லாம் சரிவரக் கலந்து செவ்வையாய் மிதிபட்டால் அவை ஒரே அளவாய் மெள்ள மெள்ள மட்கும்.

முன் கூறப்பட்ட எருக்குழியின்மேல் ஒரு சிறு பந்தல் போட முடியாவிட்டால், எருக்குவியலை மண்ணினாலாவது மூடவேண்டும். எருக்குவியல்களை மண்ணினால் மூடுவது மிகப் பிரயோஜனமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்வது அதிலுள்ள சாராம்சமான செழிப்புண்டாக்கும் பொருள்களை வீணாய்ப்போகாதபடி தடுக்கிறது. இந்த வழக்கம் திருநெல்வேலி முதலான சில இடங்களில் அதிக அநுகூலத்தோடு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது: எருக் குவியலின் மேற்பாகங்கள் வறண்டுபோவதா யிருந்தால் அதை ஈரம் படும்படி மேல்கீழாகக் குவியல்களைக் கலக்கவேண்டும். பொதுவாகக் குவியல் கெட்டியாகிறதா யிருந்தால் வறண்டு போகாதபடி கொஞ்சம் ஜலத்தைத் தெளிக்கவேண்டும். எருக்குவியல்களை மூடுவதினால் அதை அதிகமாய் உலர்ந்துபோகாதபடி செய்கிறது. முழுக் குவியலும் சாவதானமாய்ப் பூராவும் மட்கி உரத்திலுள்ள செழிப்புண்டாக்கும் பொருள்கள் வீண்போகாமல் பாதுகாக்கப்பட்டு உடனே அதிக உபயோகமாகும்படி எருக்குவியலை ஈர சம்பந்தமான நிலையில் பாதுகாப்பது முழு நோக்காக இருக்கவேண்டும்.

---

# கல்விக் குறிப்புகள்
# Educational Notes

**மஹாமஹோபாத்யாயர். உ. வே. சுவாமிநாதையரவர்கள் பென்ஷன் பெறுதல்**

சென்ற 39 வருஷங்களாகக் கும்பகோணத்திலும் சென்னையிலும் கவர்ன்மெண்டு காலேஜ்களில் தமிழ்ப்பண்டிதராக விருந்த மஹாமஹோபாத்யாயர், பண்டித ஸ்ரீமான் உ. வே. சுவாமிநாதையரவர்கள், மார்ச்சு மாதக் கடைசியில் பென்ஷன் பெற்றுக்கொண்டார்கள். ஸ்ரீமான் ஐயரவர்கள் நமது தாய்ப் பாஷையாகிய தமிழுக்குச் செய்திருக்கும் உபகாரம் அளவுபடுவதன்று. பழைய சங்க நூல்களில் பலவற்றை மிகச் சிறந்த உரைகளுடன் பதிப்பித்து வெளியிட்ட புண்யம் ஐயரவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது. அவர்களுடைய தமிழ்ப் பாண்டித்யத்தைக் கவர்ன்மெண்டார் அங்கீகரித்ததற்கு அறிகுறியாக அவர்களுக்கு 'மஹாமஹோபாத்யாயர்' என்ற கௌரவப்பட்டமும், ஸன்மானமும் 1905-ம் வருஷத்தில் அளித்தார்கள். ஐயரவர்களுடைய தயாளம், காட்சிக்கெளிமை, வாக்குச் சாதுர்யம், மனத்தூய்மை முதலியவற்றைப் பற்றி நாம் விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் விஷயத்தில் ஐயரவர்கள் தமது உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் அர்ப்பணம் பண்ணிய விஷயமும் நாடெலாமறிந்ததே. இனி, அவர்கள் பென்ஷன் பெற்றுக்கொண்டு நெடுங்காலம் அரோக திடகாத்திரராகவிருந்து தமிழுலகத்தைப் பெரிதும் பெருமைப் படுத்துவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

* * *

**உபாத்தியாயர்களின் ஸபையின் நடவடிக்கைகள்.**

சென்னை உபாத்தியாயர்களின் ஸபையைச் சேர்ந்த ஓர் மஹாநாடு நாளது மாதம் 15,22-உகளில் பச்சையப்பன் காலேஜில் நடந்தேறியது. நமது கவர்னர் அவர்கள் அம் மஹாநாட்டை ஆரம்பம் பண்ணினார்கள். வித்யா விஷயத்தில் சிரத்தை யெடுத்துழைக்கும் பிரமுகர்களும் உபாத்தியாயர்களும் அங்கு விஜயம் செய்திருந்தனர். கல்வி விஷயமான வியாசங்கள் சில

படிக்கப்பட்டன. ஸபையார்கள் கூடித் தீர்மானித்த சில விஷயங்களை அபிமானிகள் அறியவேண்டுகிறோம்:—போதனு கலாசாலைகளில் பழகும் மாணவர்களுக்கு இப்பொழுதுள்ளதைக் காட்டிலும் அதிகமான வித்யாவிர்த்தி கொடுபடவேண்டும்; ஸபையார், சென்னைக் கார்பொரேஷனுக்கு ஒரு பிரதிநிதியைத்தேர்ந்தனுப்பும் சுதந்தரம்பெறவேண்டும்; சட்டநிருபண ஸபையில் இனி வித்யா விஷயம் விசேஷமாகக் கவனிக்கப்படு மாதலால் வித்யா விஷயத்தில் சிரத்தை கொள்ளும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத சிலர் பிரதிநிதிகளாக நியமனம் பெறவேண்டும்; நடுத்தரக்கல்விக்கும் சர்வகலாசாலைக்கும்நெருங்கிய சம்பந்தமிருப்பதால், நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் உள்ள சில உபாத்தியாயர்கள் ஸர்வகலாசாலை யங்கத்தினராக நியமனம் பெறவேண்டும்; பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் வேலைபார்க்கும் நேரம் குறைக்கப்படவேண்டும்; உபகாரத் தொகை கொடுப்பதில், பிரதமக் கல்வி உபாத்தியாயர்களுக்கு வருஷமொன்றுக்கு ரூ. 48 வீதமும்,லோயர் எலிமெண்டரி வகுப்பு உபாத்தியாயர்களுக்கு ரூ. 60 வீதமும், உயர்தர எலிமெண்டரி வகுப்பாருக்கு ரூ. 120 வீதமும் கொடுபடவேண்டும். ஸகிண்டரிப் பள்ளிக்கூடங்களில் மேல் வகுப்புகளில் சுயபாஷையிலேயே கல்வி போதிக்கும் முறையை அதிகமாக அனுஷ்டிக்கவேண்டும், என்பனவாம்.

* * *

**பம்பாயில் உபாத்தியாயர்களுக்குப் பஞ்சப்படி**

பம்பாய் மாகாணத்தில் விலைவாசிகள் அதிகப் பட்டதன் காரணமாக, குறைந்தசம்பளம் வாங்கும் உபாத்தியாயர்களுடைய கஷ்டதசையைக் கொஞ்சம்நிவர்த்திக்கும் பொருட்டு அவர்களுக்குப்பஞ்சப்படி கொடுக்கும்படி கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கின்றனர். முனிஸிபாலிடியாலும் லோகல் போர்டுகளாலும் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களிலும் இப்படிப்பட்ட பஞ்சப்படி கொடுபட வேண்டுமென்று நியமனமாகியுள்ளது. இவர்கள், பணச் செலவு வியாஜத்தால் எங்கே பஞ்சப்படி கொடுக்காமலிருந்து விடுவார்களோ என்று கருதிய கவர்ன்மெண்டார் இவ்விஷயமாக நேரக்கூடிய செலவைத் தாங்களே ஏற்றுக் கொள்வதாகவும் முன் வந்துள்ளனர். இவ்விஷயம் நமக்குச் சந்தோஷத்தைத் தருகிறது. மற்றைய உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும், உபாத்தியாயர்கள் வறுமையாலும் கவலையாலும் சஞ்சலப் படாதபடி பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். பம்பாய் மாகாணத்தில் நடைபெறும் அகவிலை யேற்றமும் கருப்பும் நமது மாகாணத்திலு முள்ளன. ஆகவே, இங்கும் அப்படிப்பட்ட பணவுதவி உபாத்தியாயர்களுக்குச் சீக்கிரத்தில் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்படுமென எதிர்பார்க்கிறோம்.

* * *

**1912-1917 வருஷங்களில் இந்தியக் கல்வி யபிவிருத்தி**

வித்யா விஷயமான புரோவிருத்தியைப் பற்றிக் கவர்ன்மெண்டார் ஐந்து வருஷங்களுக்கொருமுறை ஒரு 'ரிபோர்ட்டு' வெளியிடுவது வழக்கம். அவ்வாறான ரிபோர்ட்டில் ஏழாவது 1912-1917 வருஷங்களைப்பற்றியது இப்போது வெளிவந்துள்ளது. அதிலுள்ள சாராம்சங்களை அபிமானிகள் அறியவேண்டுமென்னும் நோக்கத்துடன் இங்குக் குறிக்கின்றோம். பிரதமக் கல்வி விஷயத்தில் நமது நாடு நாகரீகம் முதிர்ந்த நாடுகளைக் காட்டிலும் வெகுதூரம் பின்னடைந்திருக்கின்றது. ஜன ஸங்கியையில் நூற்றுக்கு எத்தனைபேர் பிரதமக் கல்வியைக் கற்கிறார்களென்பது பின்வரும் விஷயம் தெரிவிக்கும்:

| | |
|---|---|
| ஐக்கிய மாகாணங்கள் | 20 |
| இங்கிலாந்து தேசம் | 17 |
| ஜர்மன் ராஜ்யம் | 16 |
| பிரான்ஸ் | 14 |
| ஜப்பான் | 13 |
| இலங்கை | 9 |
| ருஷியா | 4 |
| ப்ரஸீல் | 3 |
| இந்தியா | 2 |

இப்படிப் பிரதமக் கல்வி விஷயத்தில் நாம் பின்னடைந்திருப்பினும், உயர்தரக் கல்வி சம்பந்தப்பட்டமட்டில் நாம் அவ்வளவு கேவல நிலைமையில் இல்லை. இந்த ரிபோர்ட்டை எழுதிய ஸ்ரீமான்,கனம் K. ஷார்ப் "இந்திய தேசம் ஒவ்வொரு விஷயத்திலும் மிதமிஞ்சிய நாடு எனப்படுகிறது. இதன் உண்மை அங்கு வசிக்

கும் ஜனங்களின் கல்வி விஷயத்தினின்றும் வெளியாகும். மத்திம தசையிலுள்ளவர்கள் இலக்கிய ஞானத்தைக் கற்றுக் கொள்பவர்களாயும், ஏழைகளில் ஒரு சிலரே எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டவர்களாயும், ஸ்திரீ ஜாதிகளில் பெரும்பாலும் அனைவருமே எழுத்து வாசனை யற்றவர்களாயு மிருக்கின்றனர்" என்று கூறுகின்றனர்.

* * *

**ஸ்ரீங்கேரிப் பள்ளிக்கூடம்**

மைசூர் ராஜ்யத்தில் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர் வீற்றிருக்கும் புண்ணிய ஸ்தலமாகிய ஸ்ரீங்கேரியில் ஒரு ஆங்கிலப் பள்ளிக்கூட மிருந்தது. பரம வைதிகர்களாயும் நிஷ்டையுள்ளவர்களாயுமிருக்கும் அவ்வூர் ஜனங்கள் அந்தப் பள்ளிக்கூடத்தில் 'தீண்டாதவர்' சேர்ந்து படிக்கக்கூடாதென்று வாதித்து, தங்களுக்கென்றே ஒரு பள்ளிக்கூடத்தைச் சொந்தச் செலவில் ஏற்படுத்திக் கொண்டனராம். இப்படிச் செய்தது புரோவிருத்திக்கு இடையூறாகுமென்றும் ஸர்க்கார் பள்ளிக்கூடங்களில் எல்லாச் சாதியாரும் சேர்ந்து வாசிக்கப் பாத்தியம் பெற்றவர்களென்றும் மைசூர் ராஜ்யாதிகாரிகள் சொல்வதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், உயர்ந்தஜாதியார் ஏற்படுத்திக்கொண்ட பள்ளிக்கூடத்துக்கு, வித்யா இலாகா அதிகாரியின் அனுமதியை முன்னதாகவே பெற்றிருக்க வேண்டுமென்றும், அப்படிப் பெறாத குற்றத்திற்காக அந்தப் பள்ளிக்கூடத்திற்கு, மற்றைய பள்ளிச்கூடங்களுக்குக் கொடுபடும் உபகாரத் தொகையைப்போன்ற தொகை கொடுக்கப்படமாட்டாதென்றும் உத்தரவு ஆகியிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். புதிய பள்ளிக்கூடத்தில் போதிக்கப்படும் கல்வி, அதிகார விரோதமாயாவது ஸன்மார்க்கத்திற்கு ஏற்றதாகாதபடியாவது இருந்தால், மேற்கூறிய உத்தரவு பொருத்தமானதாக விருக்கும். அப்படி நாம் ஒன்றும் கேள்விப்படவில்லையாதலால், அதிகாரிகள் செய்த உத்தரவு நியாயமானதென்று நாம் நினைக்கவில்லை. கூடிய சீக்கிரத்தில் இந்த உத்தரவு ரத்தாகி விடுமென எதிர்பார்க்கிறோம்.

---

# வஸந்த மந்திரம்

(286-ம் பக்கத் தொடர்ச்சி.)

## Part II.

### இரண்டாம் பாகம்

### சலிப்பும்—சஞ்சலமும்

### முதல் அத்தியாயம்

### பாலைவனம்

வைசாகமாதத்தில் விடியற்காலம்: சுக்கிரன் உதயமாய்ப் பனை உயரத்துக்கு வந்துவிட்டான். விடிய இன்னும் 4, 5, நாழிகை இருக்கலாம். பக்ஷிகள் எல்லாம் கூடுகளிலிருந்து கத்துகின்றன; ஆனால் இன்னும் வெளிப்புறப்படவில்லை. கோழி கூவும் சப்தம் காதில் விழுவதால் பக்கத்தில் ஒரு கிராமம் இருக்கின்றதென்பது நிச்சயமாகின்றது. தூரத்திலிருந்து கேட்பது நாயின் அழுகைக் குரல்; நரியும் தோட்டங்களில் ஊளையிடுகின்றன. 'கீச்! கீச்' என்று கத்திக்கொண்டு வௌவால்கள் வேகமாய்த் திரும்பி வருகின்றன. காற்றென்பதே கிடையாது. மரங்களின் இலைகள் ஆட்டமில்லாதிருப்பதைப் பார்த்தால் ஏதோ மாயையால் ஏற்பட்ட பொய் மரங்கள் போல் தோன்றுகின்றன. நடு வானத்தில் சந்திரன் நிற்கின்றான். சற்றே மெல்லிய மேகம் அவனை மறைத்துக்கொண்டு நிற்கின்றது. கிழக்கு வெளுத்துவிட்டது. வானத்து நக்ஷத்திரங்கள், ஒவ்வொன்றாய் ஓடி ஒளிகின்றன.

மேற்சொன்ன சப்தங்களைத் தவிர வேறு மனுஷ்ய சப்தமே கிடையாது. தூரத்துக்கிராமத்திலிருந்து மட்டும் மெல்லிய புல்லாங்குழல் ஓசை சிறிது பொழுதிற்கு ஒரு முறை காதில் விழுகின்றது. எச்சிறுவன் விடியற்காலையில் எழுந்து அப்பியாசம் செய்கிறானோ தெரியவில்லை. முன்னால் இருக்கும் தோப்பில் ஒரு சத்திரம் கட்டியிருக்கிறது. அங்கே என்ன நிகழ்கின்றதென்பதை நாம் இப்பொழுது முக்கியமாய்க் கவனிக்க வேண்டும்.

---

ஒருசாண் காட்டிலே ஒரு முழத்தடி வெட்டலாமா?

தோப்பின் உள்ளே நுழைந்ததும், வெளிப் புறத்தை விடச் சற்றுக் குளிர்மையாய் இருக்கின்றது. இருட்டோ வெளிப்புறத்தை விட வெகு அதிகம். 10, 15 அடி முன்னே சென்றால் இரண்டு பாதைகள் பிரிகின்றன. ஒன்று, வலது பக்கமாய்க் குதிரை லாயத்துக்குப் போகின்றது. மற்றொன்று சத்திரத்து வாயிலுக்குப் போகும் வழி. இவ்வழிகளின் இரு புறமும் செடிகள் அடர்த்தியாய் வளர்ந்திருக்கின்றன. அவை என்ன செடிகள் என்று இருட்டில் சொல்ல முடியவில்லை. சிலவற்றில் புஷ்பம் மலர்ந்து மணம் வீசுகின்றது. அங்குமிங்கும் "ஞொய்" என்று சுவர்க் கோழிகள் கத்திக்கொண் டிருக்கின்றன. குதிரை லாயத்தில் அசுவங்கள் இருக்கின்றனவென்பதும் புலப்படுகின்றது. ஏனெனில் 'டப்', 'டப்' என்று குதிரைக் குளம்புகளைப் கீழே தட்டும் சப்தமும், புல் தின்னும் போதே அப்பிராணி உறுமும் சப்தமும், காதில் படுகின்றன. ஒரு அறையில் சற்றே வெளிச்சம் தோன்றித் தோன்றி மறைவதால் அங்கே செல்வோம்.

அவ்வறையில் ஒரு ஆள் உட்கார்ந்து கொண்டு அடுப்பூதுகின்றான். மேல் ஒரு சட்டியில் கொள்ளு வேகின்றது. அவன் "என்னடா இது பெருத்த தொந்தரவா இருக்குது: சுருக்கனு ஆயித்தொலச்சாத் தேவலை. தேகம் முழுதும் உருகுது வேர்வை விட்டு! அவன் தூங்கரான் கொரட்டை விட்டு. நேக்கு வந்தது பிராணனுக்கு! போது விடிஞ்சு போச்சு. இன்னும் ஆகல்லையே இந்தப் பாழும் வேலை" என்று முணுமுணுத்துக்கொண்டே பானையைத் திறந்து, கொள்ளு வெந்து போயிற்றுவென்று பார்க்கின்றான். வெந்து போனதென்று தெரிந்தவுடன் "இன்னும் சித்தை இருக்கட்டும் அடுப்பின் மேலேயே; போய் எழுப்பலாம் அவனை. அப்பாடா என்ன சுகமாய் இருக்கிறது" என்று ஈரத் துண்டினால் உடம்பின் மேலுள்ள வேர்வையைத் துடைத்துக் கொண்டான். உடனே வெளியே சத்திரத்துக்கு ஓடிப்போய், சத்திரத்துத் திண்ணையில் குதிரையின் போர்வைத் துணியைக் கீழே விரித்துப் படுத்துத் தூங்கும் மனிதனிடம் நின்றுகொண்டு "அடே அண்ணா! சித்திரா!" என்று கூவவே, அவன் "ஹூம்" என்று உடனே எழுந்தான். எழுந்தவன் "ஏ! தம்பி ஆச்சா எல்லாம். பல்லு விளக்கிக்கிட்டு, பொறப்படலாமா? பொழுது கிளம்பப்போவது போலிருக்கே! அடடே! வெள்ளி மீன் உச்சிக்கு வந்திடிச்சே! என்ன? எல்லாம் ஆச்சா? பளிச்சென்னு சொல்லு தம்பீ" என்றான்.

"அண்ணே! ஆகாட்டால் இப்போ வந்து எழுப்புவாங்களா தெரியில்லையா?"

"சரி தம்பீ! ஆனால் எல்லாம் சுருட்டிக் கட்டு" என்று, இருவரும் துணிகளை எடுத்துக்கொண்டு, லாயத்தை நோக்கிப் புறப்பட்டனர். அங்கே சென்றதும், தூங்கியெழுந்தவன் திடுக்கிட்டு "எங்கடா என் குதிரை?" என்று சுற்று முற்றும் பார்க்க, மற்றவன் "அறுத்துக்கொண்டு போய் அதோ மேயறது. புடிச்சுக் கொண்டுவா" என்றான். அவன்போய்க் குதிரையை ஓட்டிக் கொண்டு வருவதற்குள், கொள் முதலிய சாமான்களையும், துணி துண்டு மூட்டைகளையும் ஒழுங்காய்க் கட்டிப் பிரயாணத்துக்கு சித்தப்படுத்தினான். காலதாமதம் செய்யாமல் இருவரும் குதிரை யேறிப் புறப்படவே, வழியில் "என்னடா தம்பி! ஏமாங்கா! இப்படியும் நமக்குத் தொந்தரவு வருமா? இந்தக் கோடை காலத்தில் தண்ணியில்லா மார்க்கத்தில் பரதேசிகள்போலப் போக வேண்டியிருக்கே! அதைச் சொல்லடா தம்பி!" என்றான் சித்திரன்.

"அண்ணே சித்திரா! என்னத்தைச் சொல்லறது. ஆச்சு எல்லாம். இன்னிக்கு மத்தியானம் போயிட்டால் பரவாயில்லை யென்னல்லவா சொன்னாங்கோ. பாக்கலாம். புறப்பட்ட பின்னே போய்த்தானே தீரணும்! நீயோ பெரிய சிப்பாய் என்னல்லவா பேரு! அதுக்கே உன்னை அனுப்பினாங்கோ!"

"நம்ம ராஜா விஷயத்துலே வேலை செய்யப் பின் வாங்கிடுவேன் என்னு எண்ண வேண்டாம்! அதில்லை: அது எப்போதும் இல்லை. பின்னை என்னன்னாக், கால் வழி நடக்கக் கூடவில்லை. இன்னும் சூரியன் புறப்படவில்லே வேர்வை கொட்டரது. இலையாவது ஆட்ரதா பாரேன்."

"இப்பொழுது கஷ்டப்பட்டால் பின்னே சுகம் தானே. அது தெரியில்லையா? கல்யா

ஒருநாளும் சிரிக்காதவன் திருநாளிலே சிரித்தான், திருநாளும் வெறு நாளாயிற்று.

ணம் நிச்சயமாய் விட்டால் அப்புறம் உன் பாடு கேப்பானேன். பாட்டுக் கச்சேரி—”

“ என்தம்பி! மானத்தை வாங்றாய்! பாட்டுக் கச்சேரியாவது கீட்டுக் கச்சேரியாவது? ஒண்ணும் தலைகால் தெரியாமலிருக்குது: கலியாணமே நடக்குதோ இல்லையோ—”

“ ஏன் அண்ணே அப்படிச் சொல்லறாய்! நாம் போறதே அதுக்கில்லையா?”

“ எதுக்குன்னு யாருக்குத் தெரியும் ஏமாங்கா? ஒருத்தரிடத்திருந்தும் நிச்சயம் தெரியவில்லை. நாமும் கடுதாசிகொண்டு போறமே தவிர சமாசாரம் இன்னதென்று தெரியாதே. ஊரில் பேசிக்கொள்வது நாலாவிதமாய் இருக்குது.”

“ ஆமாம்! அதுக்கென்ன தடை? நாம் புறப்பட அன்னிக்குக்கூட ஒரு பாப்பான் ஆத்தாங்கரையிலே ‘கல்யாணம் நடந்தபோது பார்ப்போம்’ என்னல்லே. ஜோதிபுரிக்குப் போனால் தெரியுமே எல்லா விஷயமும்.”

“ அங்கதான் என்ன தெரியப்போறது. ஜயபாலராஜனே சம்மதப்படவில்லை என்னு சிலர் சொல்லறா; நமக்கென்ன தெரியுது”—பாடுகின்றான்.

இவர் இருவரும் இன்னார் என்று படிப்போரும் கேட்போரும் அறிந்துகொண்டிருக்கலாம். என்ன விஷயமாய் ஜோதிபுரிக்குப் போகிறார்கள் என்பது அவர்களுக்குத்தெரியாவிடினும், நமக்குத் தெரியுமல்லவா! பிரதாபசிங்கன் தனது மந்திரியுடனும் இராணியுடனும் ஆலோசனை செய்தபின், அதன்படி ஜயபாலனுக்கு நடந்த விபரமெல்லாம் எடுத்துச் சொல்லி, அவனது துணையை வேண்டி தூதனுப்பி யிருக்கின்றான். நமது பழைய சினேகிதரான ஏமாங்கதனும் சித்திரக்கிரீவனும் கடிதத்துடன் ஜோதிபுரிக்குச் செல்லுகின்றனர். இவ்விஷயம் தன் எண்ணப்படி நடக்கும் வரையில் ஒருவருக்கும் தெரியக்கூடாதென்று வெகு இரகசியமாய் வேலை செய்கின்றான் பிரதாபசிங்கன். லலிதைக்குக்கூட நடந்த விஷயங்கள் முழுவதும் தெரியவராது. ஆனால் இவ்விதமான இரகசியங்களுக்கு எப்படியாவது கால்முளைத்து விடுகின்றதல்லவா? விதம் விதமாயும் விசித்திரமாயும் விஷயத்தை மாற்றித் தமது மனோயுக்திக்குத் தக்கபடி ‘சிட்டாக்கட்டி’ வெளியில் அனுப்புவதற்கு எவ்வளவு கெட்டிக்காரர்கள் இல்லை. உலகத்தில் ஒரு காரியம் நிறைவேறுவதற்குள் பதினாயிரம் விதமாய்க் கிளைகளுடன், எதிர்பாராதபடியெல்லாம் புறப்பட்டுவிடுகின்றது. கல்யாணம் என்றால் ‘பெண் கொஞ்சம் நொண்டி,’யென்று ஒரு அபவாதம் புறப்படுகின்றது. இரண்டொரு நாளில், அப்பெண்ணுக்கு அடிக்கடி மூர்ச்சை போட்டுவிடுகின்றது: ஒரு முறைநானே பக்கத்திலிருந்தேன்; மருந்துகூடக் கொடுத்தேன், என்று ஒரு மஹாப்பிரபு வீண்வார்த்தை கிளப்புகின்றான்! பெண்ணுக்குப் பொய் ஜாதகம் எழுதி வைத்திருக்கிறார்கள், என்று சில சமயங்களில் சொல்லிக்கொள்ளுகிறார்கள்! பிள்ளைக்குக் கொஞ்சம் காது மத்தியமம் என்று யாரோ சொன்னதை, யாரோ கேள்விப்பட்டதாக, ஊரெங்கும் சமாசாரம் பரவுகின்றது. இப்படிப்பட்ட விசித்திரமான உலகில் வெறும் வாயை மெல்லுகின்றவர் ஒரு வாய் அவல் கிடைத்தால் விடுவார்களா? அதுவும் அரசன் அரண்மனையில் எத்தனை சேவகர்கள்! எத்தனை சேடிகள்! அவர்களுக்கு எத்தனை உறவினர்கள்! அவர்களுடன் அன்பு பராட்டும் ஆண்பெண் பாலர்கள் எத்தனைபேர்! இப்படியிருக்க, ஊசியளவான விஷயம் படிப்படியாய்ப் பனையளவாகி வெளிப்புறப்படு மென்பதில் தடையென்ன! தர்பாரில் பாட்டுக்கச்சேரி நடந்ததும், கல்யாணத்துக்குப் பிரயத்தனம் செய்ததும், சிந்து பாக்ஷாவினிட மிருந்து தூது வந்ததும், அத்துருக்கச் சிப்பாய் உளறிக்கொட்டியதும், இப்பொழுது கல்யாண தடபுடல் சற்று நிதானமாய் நடப்பதும்,—இவற்றை ஒன்று கூட்டிப் பார்த்தால் எத்தனை விதமாய் ஊகிக்க வழியிருக்கின்றன! நமது வீரர்களான ஏமாங்கதன், விசித்திரவீரியன், இவர்கள் காதில் விழுந்தது ஒருவிதமான கதை அவ்வளவே: உண்மைமட்டும் தெரிந்தால், இந்த வெயிற்காலமில்லை, நெருப்பின் வழியே நுழைந்து போய்த் தேவலோகத்தை எட்டிவரவேண்டுமென்றாலும் பின்வாங்காமல் ராஜபக்தியுடன் ஒரு கை பார்த்தே வருவார்கள்.

விடிந்து 7, 8 நாழிகை ஆயிற்று. வெயிலின் கடுமை 15, 18 நாழிகை போலிருக்கின்றது. வழியில் ஒரு நீரோடையைக் காணவே

ஒருபானை சோற்றுக்கு ஒன்றே மாதிரி.

அவ்விடத்தில் இறங்கிக் குதிரைகளைக் கட்டி விட்டு அவற்றிற்குக் கொள் முதலிய ஆகாரங் களைக்கொடுத்துவிட்டு, நீரண்டை உட்கார்ந்து சோற்று மூட்டையை அவிழ்த்தனர். ஜலத் தை வாயில் விடவே, உப்பு இவ்வளவென்று சொல்லி முடியாது; எப்படிக் குடிப்பது அந்தத் தண்ணீரை! ஏதோ வயிற்றுக்கு ஆகாரம் மட்டும் உட்கொண்டு மறுபடி புறப் பட்டனர்.

வெயில் அதிகரித்து விட்டபோதிலும் உச் சிப்பொழுதுக்குள் ஏதாவது ஒரு கிராமத்தில் போய்த் தங்கலாம் என்று எண்ணியிருந் தனர். ஆனால் வழி தப்பி வனாந்தரங்களின் உள்ளே நுழைந்து விட்டனர் என்ற சங்கதி அவர்களுக்குத் தெரியவில்லை. குதிரைகள் களைதீர்ந்து வேகமாய் ஓடுகின்றன. நாழிகை படிப்படியாய் ஏறுகின்றது. ஊரையும் காணோம்: குளத்தையும் காணோம்: வரவர மலைப்பாங்கான வழிகள் அதிகரிக்கின்றன. நிற்பதற்குக்கூட நிழல் கிடையாது. மர மென்ற பெயரே, சுற்றுப் புறங்களில் கிடை யாது. வறண்டுபோன புற்களும் நாணல் களும் வழியை அடைக்கின்றன. குதிரை கள் போவதால் கலைக்கப்பட்டு நாணல் விதை கள் பறந்து வந்து கண், மூக்கு, வாயெல்லாம் புகுந்து கொள்ளுகின்றன. தாகத்தாலும், வெயிலின் கொடுமையாலும், இரண்டு வீரரும் களைத்துப் போய்விட்டனர். குதிரைகளைத் தூரத்திக்கொண்டு வந்தபடியால் அவற்றின் வாயில் நுரை தள்ளுகின்றது. மயங்குகின் றனர் இருவரும்!

ஏமாங்கதன் "அண்ணா, இந்தக் காடுதான் நமக்குச் சுடுகாடு: இன்னும் ஒரு நாழி இப்படி வழி நடந்தாக்கால் நாம் உயிரை விடறது நிச் சயம்—எனக்கு நா வறண்டுபோகிறது—இனி சாத்தியப்படாதப்பா—என்ன செய்வேன்."

சித்திரக்கிரீவன் "மயங்காதே தம்பீ! உயி ரைச் சற்று பிடித்திரு: வழிதப்பிட்டோம் என்று தோணறது. இதோ இருக்கிற குன் றின்பேரில் ஒரே தாவலாய்த் தாவி சுற்றிலும் பார்க்கிறேன். ஏதாவது குடிசை தென்ப டாதா சுவாமீ!" என்று குதிரையைவிட்டுக் குதித்து, குன்றில் ஏறிச் சுற்றிலும் பார்த் தான். கிழக்கு, வடக்கு, மேற்கு, மூன்று திக்கிலும் ஒன்றும் புலப்படவில்லை. நாணல் காடுதான் கண்ணுக் கெட்டியவரையில். தெற் கே ஒரு பள்ளத்தாக்கு: அதன் நாற்புறமும் உயரமாய் இருக்கின்றன. நடுப்பாகம் தென் படவில்லை. அதன் மத்தியில் 4, 5 மரங்க ளும், சில செடிகளும் இருப்பதாகத் தோன் றியபடியால், அவற்றினடியே வெயிலைக் கழிக் கலாமென்று எண்ணிக் கீழேகுதித்து ஏமாங் கதனிடம் வந்து "தம்பீ! தைரியமாய் இரு: நாம் வழிதப்பிவிட்டோம் என்பதில் சந்தேக மில்லை. அங்கே ஒரு இடம் இருக்குது: அங்கே நிழலில் தங்குவோம். போவோம் வா அங்கே: அரை நாழியில் போயிடலாம். வெயில் தணிந்ததும் மேலே யோசிப்போம். விடு குதி ரையை" என்று தானும் குதிரைமீதேறிப் புறப்பட்டான். மலையைச் சுற்றிக்கொண்டு தத்தளித்து, அரை நாழிகையில் அவ்விடம் சென்றனர்.

மலைகளின் நடுவேயிருந்த அந்தப் பள்ளத் தாக்கிலேயே நாற்புறத்து ஜலமும் ஓடிவரும். கிழக்குப் பக்கமும் உயரமாய் இருந்ததால் மழைநீர் தங்கி அப்பள்ளத்தாக்கு ஒரு பெரிய ஏரியாய்விடும். அப்படியினின்று அவ்விடம் தணிந்து தண்ணீர் ஓடிப்போக ஒரு வாய்க் கால்போ விருக்கின்றது. அவ்வழியாய் ஜல மெல்லாம் வடிந்துபோகின்றது. மழைக்காலத் தில் அவ்வாய்க்கால்வழியாய்ஜலம் ஓடிக்கொண் டிருக்கும். பக்கத்து வனாந்திரங்களில் உள்ள மிருகங்களெல்லாம் அவ்விடத்துக்கு வந்து தான் தண்ணீர் அருந்தும். அதுபற்றி அவ் வோடைக்கு "மிருகதீர்த்தம்" என்று பேர். இதன் நடுவே நன்றாய் முதிர்ந்த வாழைமரம் நாலைந்தும், பலாசமரம் நாலைந்தும், ஆகாயத் தை அளாவி வளர்ந்திருக்கின்றன. நடுவே சில விடங்களில் புதராய்ச் சில செடிகளும் கொடிகளும் முளைத்திருக்கின்றன. மரங்க ளின் வேர்களுக்கு நடுவே 'ஜிலு, ஜிலு' வென்று ஒரு சிறிய ஊற்று ஓடிவரு கின்றது. அவ்வூற்று சுமார் 10, 15 அடி தூரம்தான் வெளியே தெரிகின்றது. அதற்குப் பின் தென்படுகிறதில்லை. பாறை களின் கீழே ஓடும் ஜலம் இந்த இடத்தில் சற்று வெளிக்கிளம்பி 10,15 அடிதூரம் ஓடிய பின்னர் மறுபடி பாறைகளில் மறைந்துவிடு கின்றது. புதிதாய் வந்தவர்கள் சப்தத் தைக்கேட்டு ஊற்றைத் தேடவேண்டுமே

யன்றி நேரில் கண்ணுக்குப் புலப்படுவதாய் இல்லை.

பள்ளத்தாக்கை நெருங்கினதும் குதிரைகள் கனைக்க வாரம்பித்தன. ஏமாங்கதன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு வருகின்றான். மரத்தடியில்வந்ததும் குதிரையினின்றும் இறங்கினான். அவ்வளவுதான். வெட்டித் தள்ளின மரம்போல் சாய்ந்து விட்டான். தேகத்தைச் சுடுகின்ற பாறையின்மேல் ஒரே அடியாய் நீண்டுவிட்டான். சித்திரக்கிரீவனும் உடனே குதித்து ஏமாங்கதனை வாரியெடுத்து மரத்தடியில் கொண்டுபோய்ப் படுக்க வைத்தான். ஜலத்தின் ஓசை காதில் பட்டது. ஓடினான் அவ்விடத்திற்கு! அங்கு ஓடும் ஜலத்தைக்கண்டதும் இரண்டு கைகளிலும் வாரிக்கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடி ஏமாங்கதன் முகத்தில் இறைத்தான். அவனும் சற்றுக் கண்விழிக்கவே, அவனை மெதுவாய் எடுத்து நிறுத்தி ஜலத்தண்டை அழைத்துச் சென்றான். இருவரும் திருப்தியாகும்வரையில் அவ்வமிருதத்தைப் பானம் பண்ணினார்கள்.

அமிர்தமல்லவா அவர்களுக்கு அந்த ஜலம்! அவர்களைப்போல் நாமும் கஷ்டம் அநுபவித்திருந்தால்தான் தெரியும், நமக்கும் ஜலத்தின் அருமை! ஜலத்தின் மகிமை எத்தனையோ பேர்களுக்குத் தெரிவதில்லை! என்ன விருந்தால் என்ன? ஜலமில்லையேல் ஒரு பொருளினாலும் நமக்குப் பிரயோசனமில்லை. எல்லாப் பிராணிகளுக்கும் ஜலம் அவசியம் வேண்டியிருக்கின்றதென்பதைக் காட்ட, இரண்டு குதிரைகளும் இவர்களைத் தொடர்ந்து ஜலத்தருகேவந்து குடிக்கத் தொடங்கின. அந்தப் பத்தடி தூரத்தில் எத்தனை பக்ஷிகளும், ஓணான்களும், ஜலம் குடிக்கின்றன!

தாகத்தின் கொடுமையை ஜனங்கள் கவனிப்பதில்லை. தாகம் தணிந்தபின்பே பயம் தோன்றுகின்றது. ஆகையால் மனிதர்கள் இருப்பினும் கவனியாது ஜலம் அருந்திப் பின் பயம் தூண்டப் பறந்துபோகின்றன அப்பறவைகள். சற்றுக் களைப்புத் தீரவே ஏமாங்கதன் எழுந்து நின்றான். பிறகு ஆடைகளைக் கழற்றிவிட்டு ஸ்படிகம்போல் நிறமின்றி, மந்தமான சப்தத்துடன் ஓடும் அந்நீரில் மண்டியிட்டு உட்கார்ந்து அந்நீரால் தன்தலை தேகம் எல்லாவற்றையும் நனைத்துக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினான். சித்திரக்கிரீவனும் ஸ்நானம் செய்தபின்னர், இருவரும் கொஞ்சம் உணவுண்டு மரத்தடியில் படுத்துத் தூங்கினர். குதிரைகள் மட்டும் அவ்விடத்திலேயே மேய்ந்துகொண்டிருந்தன.

## இரண்டாம் அத்தியாயம்

## மந்திராலோசனை

மேற்சொன்ன விஷயங்கள் நடந்து மூன்று நாள்கள் ஆய்விட்டன. ஜோதிபுரியில் ஸ்நான கட்டத்தில் இரண்டு பிராமணர்கள் வெகு விரைவாய் ஸ்நானமுடித்து, ஸந்தியாவந்தனம், சூர்ய நமஸ்காரம், இவை ஆனபின்னர் பேசிக்கொண்டிருக்கின்றனர். ஒருவர் "சுந்தரமூர்த்தி! என் இன்னும் நமது வண்டி வரவில்லை? ஐந்து நாழிகைக்குள் மந்திராலோசனை சபைக்கு வரவேண்டுமென்று சிதானந்தர் நேற்று இராத்திரியே சொல்லி யனுப்பினாரே! உமக்கும் வந்ததல்லவா சமாசாரம்?" எனக் கேட்டார்.

சுந்தரமூர்த்தி "இல்லாவிட்டால் இத்தனை அவசரம் என்ன? எல்லாம் முடிந்துவிட்டதே. அதே சமாசாரந்தான் என் மனதிலும் இப்பொழுது தொந்தரவு செய்துகொண்டிருக்கின்றது. சிதானந்தர் நம்மை இதுவரையில் காலைவேளையில் அழைத்ததே கிடையாது. பிரதானிகளாகிய நமக்கு என்னவேலை இருக்கக்கூடும் காலை வேளையில்?" என்றார்.

"சமாசாரம் என்னவோ நிச்சயமாய் எனக்கு விளங்கவில்லை. நேற்று சாயுங்காலம் பிரதாபசிங்கரிடமிருந்து மறுபடி ஆள் வந்ததாகச் சமாசாரம். அவ்விஷயமாய் ஏதாவது தீர்மானம் செய்யவேண்டியிருக்குமோ என்னவோ தெரியவில்லை. கல்யாண சமாசாரத்தைப்பற்றியும் விவரம் ஒன்றும் தெரியவில்லை.—"

"விசுவநாதரே! நான் சொல்வதைக் கேளும்! காலத்தின் விபரீதம் சொல்லமுடியாது. ஏ்தாதுலுக்கருடைய இடையூறு வரும்போல் தோன்றுகின்றது. ஏன் ஒளித்துப் பேசவேண்டும்? துலுக்கன் என்னவோ கேட்கிறானாம்! பிரதாபசிங்கர் பெண்வேண்டுமாம் அவனுக்கு! என்னவோ சொல்லிக்கொள்ளுகிறார்கள் உலகத்தில்!-நாம் என்னத்தைக் கண்டோம் என்ன? எல்லாம் அப்படியப்படி இருக்கின்றது—!'

"இருக்கலாம்: இருக்கக்கூடும். அதன் பொருட்டே பிரதாபசிங்கரிடமிருந்து தூதர்கள் வந்திருப்பதும் நியாயமே! முன்

ஒரு புத்திரன் ஆனாலும் குருபுத்திரன் ஆவானா?

இராமேசர் வந்தபொழுது ஏதோ கல்யாணம் நடக்குமென்று சொன்னரே ஒழிய, மற்ற விஷயங்களை இராஜாவும் மந்திரியும் இரகசியமாய் அடக்கிவிட்டார்கள்போல் தோன்றுகின்றது. முகூர்த்தம்கூடச் சீக்கிரம் வைக்க வேண்டுமென்று ஜோஸ்யரைக் கூப்பிட்டுப் பார்த்ததில் மிதுன மாதம் இரண்டாவது வாரத்தில்தான் முகூர்த்தம் இருக்கிற தென்றும், அதற்குமுன் இல்லை யென்றும் சிதானந்தர் அரசனுக்குத் தெரிவித்ததாகச் சமாசாரம் கேள்விப்பட்டேன்."

"ஆனாலும் பிரதாப சிங்கருடைய ஆள்கள் நேற்றுவருவதும், இராத்திரியே மந்திரி நமக்கெல்லாம் சபைக்குவரும்படி சொல்லியனுப்புவதும்,—"

"ஆம்! ஆம்! எனக்கும் சந்தேகமாய்த்தான் இருக்கின்றது—எல்லாம்' சபைக்குப்போனால் தெரிகின்றது — இதோ வண்டி வந்துவிட்டது—எப்படியிருந்தாலும் இராமேசர் வந்து, சுமார் ஒரு வாரம் தானே ஆகின்றது. அதற்குள் மறுபடி உதயபுரியிலிருந்து சமாசாரம் வருவதென்றால்—என்னவோ அப்பா, ஈசுவரனுக்குத்தான் வெளிச்சம்! உமது வண்டி இன்னும் வரவில்லையே: ஏன் காக்கவேண்டும்? இவ்விடத்தில் ஏறும் வண்டியில்; உம்மை வீட்டில் இறக்கிவிட்டபின் நான் வீட்டுக்குப் போகிறேன்."

இருவரும் வண்டியில் ஏறுகின்றனர். விசுவநாதர் "அடே! வண்டியைக் கடைவீதி மேல் ஓட்டி, சுந்தர மூர்த்திகள் வீட்டிற்கு விடு! பிறகு வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு போகலாம்" என்றார். வண்டி புறப்பட்டது.

இவர் இருவரும் ஜயபாலனுடைய மந்திராலோசனை சபையைச் சேர்ந்தவர்; பிராமண உத்தமர்; வேதம் ஓதி, சாஸ்திரம் கற்று, இராஜ நீதி, இராஜ தந்திரம், மனுஸ்மிருதி முதலான சட்டங்களில் பயின்றவர். இம்மாதிரி கற்றும் கேட்டும், தேர்ச்சி பெற்றோர் பன்னிரண்டு பேர் இராஜசபையின் அங்கத்தவர். அவர்களைக் கேட்டே முதலில் அரசன் எவ்விஷயத்தையும் தீர்மானம் செய்வது. இப்பன்னிரண்டு பேர்களும் ஆமோதித்த பின்பே, விஷயத்தை, பிரபுக்கள், இராணுவத்தலைவர், பெரிய உத்தியோகஸ்தர்—இவர்களால் ஆக்கப்பட்ட ஆலோசனை சபையின் முன் கொண்டுபோவது வழக்கம். அதன் பிறகே, ஒவ்வொரு சங்கதியும் சாதாரண ஜனங்களுக்கும் வெளியூராருக்கும் தெரியவரும்.

சபையோர் பன்னிரண்டு பேர்களும் வந்து கூடிவிட்டனர். மந்திரி சிதானந்தரும் அரசனும் வருகின்றனர். எல்லாரும் எழுந்து மரியாதை செய்ய, முதலில் அரசன் உட்கார்ந்தபின் அனைவரும் தத்தம் ஆஸனத்திலமர்ந்தனர். அரசன் மந்திரியை அழைத்து "ஐயா சிதானந்தரே! பிரதாபசிங்கருடைய கடிதத்தைச் சபையோர்முன் படியும்! அனைவரும் கேட்கட்டும், என்ன செய்யவேண்டுமென்பதைப் பிறகு யோசிப்போம்" என்றான்.

சிதானந்தர் படிக்கின்றார்:—"இராஜாதிராஜனைப் உலகம் புரக்கும், தன்னிகரில்லாச் சூரிய குலத்தில் உதித்த என் மருமகன் ஜயபால ராஜனுக்கு ஸர்வா பீஷ்டமும் பெருகுவதாக.—...முன் இராமேசரிடம் சொல்லியனுப்பிய ஸங்கதிகளுக்கு நாளது வரையில் பதில் கிடைக்கவில்லை, விஷயம் முக்கியமானதென்பதைக் கருதி மறுபடியும் ஞாபகப்படுத்துகின்றேன். தினமும் எதிர்பார்க்கும் துருக்கருடைய தொந்தரவு இராஜஸ்தானத்தில் ஒவ்வொரு நாட்டிற்கும் நாளடைவில் வரக்கூடியதே யல்லவா? வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டியது அவசியமென்று, உன்னைப்போன்ற புத்திசாலிகளுக்கு எடுத்துரைக்கத் தேவையில்லை. என் வலக்கை போன்று, என்றும் உதயபுரியைக் காக்க சித்தமாயிருக்கும் உன் உதவியைக் வேண்டாமல் இன்னும் வேறு யாருடைய உதவியை யான் எதிர்பார்ப்பது! கல்யாண விஷயத்——"

அரசன் "இனிப் படிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஐயன்மீர்! உங்களுக்கு சற்று விஷயத்தைத் தெளிவாய்த்தெரியபடுத்தவேண்டியதவசியம். முன்னால் நாம் பிரதாபசிங்கரின் புத்திரியின் விவாகத்தைக் குறித்து நமது அபிப்பிராயத்தை இராமேசர் மூலமாய் உதயபுரிக்குத் தெரிவித்தோமல்லவா? அதே சமயத்தில் சிந்து நாட்டுச் சுல்தான் ஆமத்பாக்ஷா, அதே கன்னிகையை மணக்க எண்ணம் கொண்டு தூதனுப்பினனும். அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்காவிடில், அவனை உதயபுரியின்மீது படையெடுத்துவர அழைப்பது போலாகுமென்று எண்ணி, தந்திரமாய்

அவன் வேண்டுகோளுக்கு ஒப்புக்கொள்வது போல் சொல்லியனுப்பிவிட்டு, அவனுடைய தூதர்கள் போனவுடன், சேனைகளைச் சித்தம் செய்துகொண்டு, தப்பாமல் துருக்கர் படையெடுத்துவருவார்கள் என்றெண்ணி, நமது உதவியைக் கேட்கின்றார். கல்யாணம் சீக்கிரம் நடத்திவிடவேண்டுமென்கின்றார். கல்யாணம் நடந்துவிட்டால் அதன்பின் இருதிறத்தார் சேனையையும் ஒன்று கூட்டித் துருக்கப்படையை வென்று ஜயமாலை சூடவேண்டுமென்பது அவரது அபிப்பிராயம். இம்மாதிரியே முன்னர் இராமேசரிடமும் சொல்லியனுப்பினார்.

இனி நமது இராஜாங்கத்தில் நடந்தவற்றைச் சொல்லுவோம். விவாகத்துக்குத் தக்க முகூர்த்தம் பார்த்துச் சொல்லியனுப்பலாம் என்று நினைத்துச் சற்று தாமதம் செய்தோம். இந்தமாதத்தில் கலியாண முகூர்த்தம் கிடைக்கவில்லை. நமது தாமதத்தைப் பார்த்து, நமது தூதர்கள் புறப்படுவதற்குள்ளாகவே மறுபடியும் சங்கதி சொல்லியனுப்பிவிட்டார். நாம் இனி உதயபுரிக்கு உதவியனுப்புவதை உத்தேசித்து எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் என்பதைச் சபையோர் எடுத்துரைப்பாராக."

விசுவநாதர் "அரசே! ஜோதிபுரியரசர்கள் இதுவரையில் இளைத்தோருக்கு உதவிசெய்யப் பின்வாங்கினவர்களல்லர். இப்பொழுதோ பிரதாபசிங்கர் அநியாயமாய்ப் பிறரை எதிர்க்கவாவது, பிறர் நாடுகளைக் கவரவாவது, எண்ணினவர் அல்லர். நமது நாட்டிற்கும் மதத்திற்கும் காமக்கேட்டினால் புத்தி மயங்கி எதிரிகளாய் வந்து முளைத்திருக்கும் மிலேச்சர்களுடன் சண்டைசெய்யுங்கால் அவர் செய்வது தர்மயுத்தமேயல்லவா? அம்மஹாமதியன் பிரதாபசிங்கிரின் புத்திரியை அடையவிரும்புவது பெரிய தப்பல்லவா? நமதரசனுக்கு லலிதாதேவியை விவாகம் செய்வது இப்பொழுதே நடப்பதாயினும் சரி, இனிச் சற்று தாமதம் ஆவதாயினும் சரி. உதயபுரிக்கு உதவிச் சேனையை அனுப்பவேண்டியதல்லவோ நமது கடமை. மற்றச் சபையோரும் அப்படியே அபிப்பிராயப்படுவார்கள் என்று எண்ணுகிறேன்" என்றார்.

சுந்தரமூர்த்தி "அரசே! பிரதாபசிங்கருக்கு உதவி செய்வதில் எனக்கும், என்போலியர்களுக்கும் ஆக்ஷேபம் இல்லையானாலும், நமது சேனையில் இப்பொழுது எத்தனைபேர் யுத்தம் செய்யத் தயாராய் இருக்கின்றார்கள் என்றும், எத்தனைபேர் நமது தேசத்தைக் காக்க அவசியமாய் வேண்டுமென்றும், சௌகரியமாய் நாம் எத்தனை வீரர்களை உதயபுரிக்கு அனுப்ப அநுகூலமாய் இருக்குமென்றும், தெரிந்தாலல்லாமல், நமது அபிப்பிராயத்தை வெளியிட முடியாது. சேனைத்தலைவரை அழைத்து, அந்த விவரங்களை விசாரித்தபின்புதான் உதவியனுப்பவேண்டிய விஷயத்தைத் தீர்மானம் செய்யவேண்டும்" என்றான்.

சேனைத்தலைவரை அழைத்து விசாரித்ததில், மொத்தம் சேனைவீரர் 20,000 என்றும், 8,000 பேர் எல்லையைக் காத்துக்கொண்டும், 3,000 பேர் சுற்றுப்புறங்களில் வேலை செய்துகொண்டும், 1,000 பேர் வியாதியஸ்தர்களாய் யுத்தம் செய்யச் சக்தியில்லாமலும் இருப்பதாகவும், மற்றச் சேனைகள் நகரத்திலேயே தயாராய் இருப்பதாகவும் தெரியவந்தது. இருப்பவர்களுள் 3,000 பேர் வரையில் அக்காலம் உதயபுரிக்கு அனுப்பத் தடையில்லையென்று சேனைத் தலைவர் அபிப்பிராயப்பட்டார்.

சிதானந்தர் "ஆனால் தற்காலம் 1,000 பேர்களை பிரதாபசிங்கரின் உதவிக்கு அனுப்பி, மிலேச்ச சேனை படையெடுத்து வருவதானால் மறுபடியும் 2,000 பேர்களையோ 3,000 பேர்களையோ அனுப்புவதாக விடையளிப்போம். சுல்தான் ஆமத், சில துருக்க அரசர்களைப் போன்று ஆலோசனை செய்யாமல் காரியத்தை மேற்கொள்பவன் அல்லன். சிறந்த புத்திசாலியென்றும், முன்பின் வருபவற்றை யோசிக்கக் கூடியவன் என்றும் கேள்விப்பட்டிருக்கின்றேன். யோசனைசெய்து, ஓர் பெண் விஷயமாக, ஒரு தேசத்தை எதிர்த்துப் பல மனிதர்களின் உயிரைப் போக்குவது தகாத காரியம் என்றெண்ணி, படையெடுக்காமல் நின்றுவிடவும் கூடும். ஆகையால் முதலில் நாம் 3,000 பேர்களையும் அனுப்பவேண்டிய அவசியம் இல்லையென்று தோன்றுகின்றது" என்றான்.

சேனைத்தலைவன் "அதுவே எனது அபிப்பிராயமும். தளகர்த்தர் ஜயசிங்கரிடம் 1,000 வீரரை அனுப்பினால், அவர்கள் இரண்டாயிரம் வீரர்களுக்குச்சமானமாய் இருப்பார்கள். அவ்வளவு சமர்த்தர் ஜயசிங்கர். அவரைப் படைத்தலைவராய் அனுப்புவது நலம் —"

விசுவநாதர் "உதயபுரியிலிருந்து வந்த வீரர்கள் இன்னமும் இருக்கின்றார்களா, திரும்பிப் போய்விட்டார்களா?"

சிதானந்தர் "அவர்களை யனுப்பிவிட்டேன்; இன்று காலையில் இதுகாறும் செய்த தாமதத்துக்கே பிரதாபசிங்கர் வருந்துகிறபடியால் இனித் தாமதம் செய்யக்கூடாதென்று விரைவில் அவர்களிடம் தக்க மறுமொழி சொல்லி யனுப்பிவிட்டேன். ஆகையால் சபையில் தீர்மானம் ஆகின்றபடி சங்கதிகளை விவரமாய் எழுதி, சீக்கிரம் பிரதாபசிங்கருக்கு விடையனுப்பவேண்டும் சேனைத்தலைவர் கணுதிபர் சேனையில் 1,000 பேர்களைத் தேர்ந்தெடுத்து ஜயசிங்கருடன் அனுப்புவிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்—"

அரசன் "சபையோர்களே! இராஜஸ்தானம் ஓரேகுடும்பம் போன்றது. நமக்குள் சில சில விடங்களில் சச்சரவு இருக்கக்கூடும். அதனாலேயே அன்னியர் இராஜபுதனத்தில் புகுந்து நமது தேசத்தைக் கைக்கொள்ள என்ன உரிமை இருக்கின்றது? தவிரவும் நாம் தீர்க்காலோசனை செய்து தீர்மானித்திருக்கும் இவ்விவாகத்துக்கு இடையூறு செய்யும் பாதகனைத் தண்டிப்பது தர்மமே யல்லவா? பிரதாபசிங்கரும் நாமும் 'வேண்டுகிறபடி சீக்கிரம் நடைபெறாமல் இவ்விவாகம் தாமதப்படுவது நமது துர் அதிர்ஷ்டமே தவிர வேறன்று. தெய்வ ஸங்கல்பத்தாலும், பெரியோர் ஆசீர்வாதத்தாலும் நன்கு முடியவேண்டிய இந்த சுப காரியத்துக்குத் தடையொன்று வருகின்றதென்பதை நினைக்கவும் மனம் தளர்கின்றது. இராஜஸ்தானத்துக்கு மிலேச்சர்களால் கஷ்டம் ஏற்படாமல் இருக்கும்படி பாதுகாப்பதே இராஜபுத்திரர்களின் முக்கிய காரியமாகும். கணுதிபர் சொல்லியபடி முதலில் ஒரு சிறிய சேனையை உதயபுரிக்கு அனுப்பட்டும். மஹாமதியர் எதிர்த்து வருவதானால் நாமே பாக்கியிருக்கும் சேனைகளை முன்னடத்திச் செல்லுவோம்" என்றான் மிகக் கோபாவேசத்துடன்.

பிறகு சபையோர் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். சேனையை எவ்வழியாய் அனுப்புவதென்பதையும், எத்தனை நாளில் புறப்படவேண்டுமென்பதையும், தீர்மானித்தபின், சபையில் நடந்த விஷயங்களைக் கூடியமட்டில் இரகசியமாய் வைத்துக்கொள்ளவேண்டுமென்று மந்திரி சபையோர்களை வேண்டிக்கொண்டான். சபை கலைந்தது.

அன்றிரவில் ஜயபாலராஜன் பட்டபாட்டை நாம் என்னவென்று சொல்வது! துக்கமும், கோபமும், ஏக்கமும், அவன் மனதைப் புண்படுத்தின. தான் எண்ணியபடி காரியம் நிறைவேறாமல் தடைப்படுகின்றதே என்று துக்கம்; இடையே நுழைந்து தடைசெய்கிறவன் மேல் கோபம்; யுத்தம் ஏற்பட்டுவிட்டால் எவ்விதம் முடிவாகுமோ, எவர் போவரோ, எவர் பிழைப்பரோவென்ற ஏக்கம். இவ்வகையாய் மனம் நொந்து நெருப்பில் விழுந்த புழுப்போல் துள்ளுவானாயினன்.

ஒருசமயத்தில் லலிதையை நினைத்துக்கொண்டு, அவள் அழகையும் குணத்தையும் எண்ணினவனாய், அம்மாதை யடையும் காலம் கிட்டுமோ என்று சோருவான். "ஐயோ! இது என்ன விந்தை! மாதுசிரோமணியான இந்த லலிதையை நான் குழந்தைப் பருவத்தில் பார்த்ததேயன்றி வயது வந்தபின் பார்த்தவனல்லன். அவள் குணங்களைப் பற்றிக் கேள்வியே ஒழிய அறிந்தவனல்லன். அப்படியிருக்க, இரும்பைக் காந்த மிழுக்குமாறு என் மனதை அவள் கவரக் காரணமென்ன? இராஜாங்க விஷயத்திலும் கூட என் மனம் முன்போல் அவ்வளவு ஊக்கமாய்ச் செல்வதில்லை. வேட்டையாடப் போனாலும் வேட்டத்தில் கவனம் செல்வதில்லை. இன்றிரவு போன்று எத்தனை இரவுகள் தூக்க மின்றிக் கழித்திருக்கின்றேன்—காதல் என்பதும் ஓர் வியாதிதானோ! அப்படித்தான் இருக்கவேண்டும்? இல்லையேல் என்மனமும் தேகமும் இப்படித் தளர்வதற்குக் காரணமென்ன? லலிதை, லலிதை யென்று மனனம் செய்துகொண்டிருக்கின்றேன்! ஈசா! அவ்வளவோடு நின்றுவிடுமோ,என் அதிர்ஷ்டம்! இராமேசர் வரும் வரையில், நாள்கள் மட்டுந்தான் என் விவாகத்துக்குத் தடையாய் நிற்கின்றன வென்றும், வேறு மானிடர்களாலும், தேவர்களாலும், இடையூறுவராதென்றும் நிச்சயமாய் எண்ணி, மனத்தைத் தேற்றிக்கொண்டு, நாழிகைகளை எண்ணி, எண்ணி, என் அருமைக் காதலியைக் காணும் காலம் கிட்டுகின்றதென்று, சபலப்பட்டுக் கொண்டிருந்தேன். மின்னாமல் இடித்

ஒருவனைக் கொன்றவன் உடனே சாவான், பலபேரைக் கொன்றவன் பட்டம் ஆளுவான்.

ததென, இக்கொடியோனல் பெருந்தடை எங்ஙனம் வந்து சேர்ந்தது!—யுத்தம் தான் செய்வோம்! நாமே ஜயிக்கின்ருேம் என்று நிச்சயம் என்ன! கடவுளுக்கே இந்தக் கல்யாணம் சம்மதமில்லையோ! அப்படியாயின் என் மனம் ஏன் லலிதையின்பால் ஈடுபட வேண்டும்!

"ஆ! ஹா! இப்படியும் மனம் தளருவேனே நான்! ஆரியகுலத்தில் உதித்து வீராதி வீரர்களை முன்னேராய் உடைய நானு இப்படி மனம் தளர்வது? யுத்தம் செய்தால் ஜயம்வருமோ என்று சந்தேகம் என் மனத்தில் உதிக்கலாமா! லலிதையை மணக்க விரும்பியதனலேயே யுத்தத்தில் உயிர் இழக்க பயப்படுவேனே! நேசித்தேன் லலிதையை! அவளுக்கும் அவள் குடும்பத்தாருக்கும் பேராபத்து வந்திருக்கின்றது போலும்! அதை நீக்கி அவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்க என்னுவி உள்ளளவும் முயலுவேன்; அம்முயற்சியில் என் பிராணன் போவதானலும் லலிதை என்னை நேசிப்பாள் என்பதற்குச் சந்தேகமில்லை; பிறர் ஒருவரையும் அவள் வேண்டாள்: இதுவே எனக்குப் போதுமான கைம்மாறு. அன்பென்னும் உணர்ச்சியின்றிக் காயாத வாலழபோல் இறப்பதினும், அன்பின் உணர்ச்சி நுழைந்து என்மனம் விஸ்தாரமான பின்பு உயிர் விடுவது மேலானதன்ருே! நேசமறியா தாரினும், நேசித்து இறந்தவர் எத்துணை சிறந்தவர்! மனமே, இன்று முதல் வருந்தாதே! தர்மகாரியத்தை மேற்கொள். உன்னிடம் விளங்கும் அன்பு, தூய அன்பாகட்டும்! லலிதையின் காரணமாய்ச் செய்யப் போகும் இச்சண்டை, ஆலோசித்துப் பார்ப்பின் இராஜஸ்தானத்துக்கே பொதுவானதன்ருே! இன்று உதயபுரிக்கு ஏற்படும் ஆபத்து நாளை ஏன் இன்னெரு நாட்டுக்கு ஏற்படக் கூடாது? யுத்தமென்னவோ நடக்குமென்று தோன்றுகின்றது.—

ஆயினும் இந்த யுத்தம் நடக்குமுன் விவாகம் நிறைவேறிவிட்டால்,—ஈசா! அற்புத மலையில் உறையும் ஜோதி ஸ்வயம்புவே! உன் திருவுள்ளம் எப்படியோ! ஒருமுறை என் காதலியைக் கண்டு ஆனந்தப்பட்டாலும் போதும்! பிறகு யுத்தத்தில் உயிர்விடினும் பெரிதன்று! வீரசுவர்க்கம் புகுவேன்——" என்று பலவாறு எண்ணி யெண்ணி, தூய வெண் படுக்கை யெல்லாம் கலைந்து தாறுமாருய்ப் போகும்படி திரும்பித் திரும்பிப் படுத்து, வெகு நேரம் தூக்கம் பிடியாமல், கடைசியாக நித்திரையில் மெய்ம்மறந்தான்.

---

# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

### வரவுக் கேற்க வாழ்

தென்னுட்டில் ஓர் ஊரில் பாக்கியமென்னும் ஒரு பெண் ஒரு நாள் கோயிலுக்குப் போய்வந்து சுபுத்தி என்று பேர்பெற்ற தன் தாயை நோக்கி, "அம்மா! அண்ணு என்னைக் கட்டைத் துடைப்பம்போல் வைத்திருக்கிருரே; அரைக்கு நல்லதாய் ஒரு புடவைகூட இல்லையே! இன்றையதினம் நான் கோயிலில் பார்த்தேன்; ஒவ்வொரு பெண்ணும் என்னென்ன நகைகள் போட்டுக்கொண்டு வந்தது; அங்கே வந்தவர்களெல்லோரும் அண்டை வீட்டுச் சுந்தரிமேலேயே கண்ணு யிருந்தார்கள். அந்தப் பெண் அழகு செய்துகொண்டு வந்ததை நானென்னவென்று சொல்லுவேன்! அங்கே என்னைப்போல் தொள்ளைக் காதும் கரித்துணியுமாய் வந்தவள் ஒருத்தியையும் நான் பார்க்கவில்லை. அண்ணுவிடம் சொல்லி நல்லதாய் ஒரு புடவையாவது வாங்கித் தரச் சொல்" என்ருள். அதைக் கேட்டுத் தாயானவள் "குழந்தாய்! நீ சொல்லுவது எனக்குச் சரியாய்த் தோன்றவில்லை. உனக்குப் புடவை வாங்கிக்கொடுத்து இரண்டு மாதங்கூட ஆகவில்லையே! அதற்குள் இது அழுக்காய் விட்டது, வேறு சேலை வேண்டுமென்ருல் எங்கிருந்து வரும்? இரண்டு மாதத்திற்குள் துணி அழுக்கடைந்து போய்விட்டதென்ருல், அது உன் அஜாக்கிரதைதானே! உன் தகப்பனர் உனக்கு வஞ்சனை செய்கிருரா? அவரால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு செய்து கொண்டு தானே வருகிருர். லக்ஷாதிகாரியைப்போல்

ஆசைப்பட்டால், எங்கிருந்து வரும்? ஏதோ சொல்ப வரும்படியைக்கொண்டு அவர் ஜீவனம் பண்ணி வருகிறாரென்பது உனக்குத் தெரியாதா?” என்றாள்.

பாக்கியம் இந்தத் தாய் சொல்லைக் கேளாமல் “நீ என்னென்னவோ சாக்குச் சொல்லுகிறாய்? அண்ணா அண்டை வீட்டுக்காரரவ்வளவு தனிகரல்லவோ? அவர் பெண்களெல்லாம் கோயிலுக்கு எப்படிச் சிங்காரித்துக்கொண்டு வந்தார்கள். கோயிலுக்கு வந்தவர்களெல்லாம் அப்பெண்களுடைய ஆடையாபரணங்களைப் பார்த்துப் பார்த்து ஒருவர்க்கொருவர் ஆச்சரியப்பட்டுக் கொண்டார்கள்” என்று சொல்ல, சுபுத்தி “அப்படி ஒரு வேளை பார்த்தால் பார்த்திருக்கலாம். அதிசயப்பட்டார்களென்கிறையே அது மாத்திரம் எனக்கு உண்மையாய்த் தோன்றவில்லை. நீயும் பெரியவளானால் இது உனக்கே நன்றாய்த் தெரியும். அண்டை வீட்டுத் தறிதலைகளைப் போலப் பிஞ்சிலே பழுத்த பெண்களைப் பெருந்தன்மையுள்ளவர்கள் ஒருவரும் மெச்ச மாட்டார்கள். இன்னொரு விஷயம் சொல்லுகிறேன் கேள். கோயிலுக்குக் கடவுளை வாழ்த்தப் போகிறதா? யார் யார் வந்திருக்கிறார்கள், யார் என்ன நகை போட்டுக் கொண்டிருக்கிறார்கள், என்னென்ன ஆடை யுடுத்திக்கொண் டிருக்கிறார்கள், யார் சொத்தை, யார் புழுத்தல் என்று ஊர்ப் பிரசங்கம் செய்யப்போகிறதா?” என்றாள்.

பாக்கியம் கேட்ட கேள்விக்கு இது ஒரு வகையான சமாதானந்தான்; ஆயினும் அவள் இதைச் சிறிதும் கருத்திற் கொள்ளாமல் “அதெல்லாம் சரிதான் அதைப்பற்றியென்ன? அங்கே வந்தவர்களெல்லாம், ஒருத்தியை ஒருத்தி பார்த்து வம்பளந்து கொண்டுதானிருந்தார்கள், பக்கத்துவீட்டுப் பெண்களைப் பார்த்துப் புகழ்ந்து பேசாதவர் ஒருவருமில்லை” என்று சொன்னதற்குச் சுபுத்தி: “பெரியோர் பேச்சைக் கேளாத அந்தப் பெண்கள் பேச்சை இனி என்னண்டை பேசவேண்டாம்; அதுகள் மூன்று மாதத்தில் முப்பது துணி கிழிக்குமே” என்று சொல்ல, பாக்கியம்: “கிழித்தால் கிழிக்கட்டும், அதற்குத் தக்கபடி நல்ல நல்ல புடவையாய் அவர்கள் வீட்டில் வாங்கிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்களா—இல்லையா? எனக்கும் அப்படி வாங்கிக் கொடுப்பதற்கென்ன?” என்று கேட்டாள். அதற்கு, “ஆமாம், அவர்கள் தந்தைக்கு வரும்படி அதிகமாய் வருகிறது, வாங்கிக் கொடுக்கிறார். உன் தகப்பனாரைப்போல் சொல்ப வரும்படியா யிருந்தால் அவர் அப்போதே காற்றிலே பறக்க வேண்டாமா? இருந்தால் வாங்கிக் கொடுக்க வஞ்சனையா? உன்னைவிட்டுப் பின் யார்க்குச் செய்யவேண்டும்” என்று தாய் சொன்னதைக்கேட்டு மகள், முன்னே இருந்ததைவிட விசனம் அதிகமாகி: “எப்போதும் நீ இப்படித்தான் பேசிக்கொண்டிருப்பாய்; நானும் இப்படியேதான் நிற்க வேண்டும். அண்டையகத்துப் பெண்களுக்கு இப்போது கலியாணம் நடக்கப்போகிறது. உடம்பு நிரம்ப நகை போடுகிறவனைப் பார்த்துக்கொடுத்து வண்மை வரிசைகளும் வேண்டியபடி செய்வார்கள். அப்போது அப்பெண்களுக்கு இன்னும் அதிகமான மாட்சிமை யுண்டாகும். என்னையோ நீங்கள் அரைத்துணிக்கு மல்லாடுகிற ஏழையாய்ப் பார்த்துக் காற்பணத்து நகை கூடக் கொடாமல் தாரை வார்க்கப்போகிறீர்கள் அதன் பிறகு அவனும் நானும் ஆயுள் முழுதும் அல்லாடவேண்டுவதுதான்” என்று சொன்னாள்.

அந்த வார்த்தையைக் கேட்டுச் சுபுத்தி, தன் வேலையிலேயே கண்ணா யிருந்துகொண்டு, “குழந்தாய்! வெகுவாய் அப்படித்தான் நடக்கும். உன் தகப்பனார்க்கு நானெப்படி வந்தேன் அறிவையா? என்னைப்போலவே நீயும் மிகுந்த சௌக்கியத்தோடு வாழலாம் சம்சாரத்தில் சௌக்கியமும் சந்தோஷமு முண்டாவது செல்வத்தினாலன்று. செல்வக் குடியிற் பிறந்தும் அநேகர் எப்போதும் எலியும் பூனையுமபோற் போராடிக் கொண்டே காலங் கழிக்கிறார்கள். புருஷன் பெண்சாதியினிடத்தில் வரவர விசேஷமாக விருப்பங்கொண்டு அவளிடத்திலே பக்ஷமுள்ளவனாய் அவளுக்காக உழைக்கத் தலைப்பட்டு, பெண்சாதியும் அதற்கியைந்த நற்குண நற்செய்கைகளோடு அவர் படுகிற பிரயாசமெல்லாம் நமக்காகவே யல்லவா வென்று “தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்” என்கிறபடி கொழுநனையே மேலான தெய்வமாக எண்ணி இன் சொல்லும் தாழ் நடையு முடையவளாகி அவர்க்கு வந்தனை வழிபாடு செய்து வருபவர்களுக்

கல்லது வீட்டுக்கலங்காரமாய்க் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பவர்களுக்குச் சௌக்கியமும் சந்தோஷமும் ஒருபோதுமுண்டாகாது. ஏழையாயினும் வல்லவனைக் கலியாணஞ் செய்து கொள்ளுவதே மேலானது. இப்போது ஊர்ப் பெண்களுடைய கெட்ட சகவாசத்தால் நீ சொன்ன வார்த்தைகளன்றி உண்மையாய் உன் இருதயத்தினின்று முண்டாயிற்றென்று எனக்குத் தோன்றினால், இவ்வளவென்று வாயினால் சொல்லக்கூடாத துக்கம் எனக்கு உண்டாயிருக்கும்; ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. உள்ளூற உனக்கு அப்படிப்பட்ட கெட்ட எண்ணம் இருக்கமாட்டாது" என்றாள்.

இவ்வாறாகத் தான் சொன்னதைத் தாய் மறுத்துச் சொல்லவே, பாக்கியம் முகங்கலங்கி ஒன்றும் பேசாமல் ஒதுங்கி நின்றாள். சுபுத்தி அது தெரிந்து பின்னும் எதிர்த்துப் பேசாமல் புன்னகையுடன், "என் கண்ணே! இப்போது உனக்கு இருக்கிற புடவைகளைக் கட்டிக் கொண்டால் அதுவே உனக்கு மிக்க அழகாயிருக்குமே. என்னைப்போல் உன்னிடத்தில் மிகவும் அன்புள்ளவர்களுடைய கண்களுக்கு வெகு அற்புதமாய்த் தோன்றுவாய். இப்போது உன் தந்தைக்குக் கொஞ்சம் செலவுக்கு இழுப்பாயிருக்கிறபடியால், இன்னும் கொஞ்ச நாளைக்கு இந்த ஆடைகளையே உபயோகித்து வருவது உசிதம். அப்படியன்றி நல்லதாய் இன்னும் ஒரு சேலை வாங்கிவிட்டால், நாளது வைகாசி மாதத்தில் திருவிழாவுக்குப் போகிறவிடத்தில் கடைத்தெருவில் பல வினோதமான வஸ்துக்களைப் பார்த்து வாங்கிக் கொடுக்கும்படி கேட்பையே, அப்போது மிகவும் வருத்தமாயிருக்கும். இரண்டுக்கும் உதவுவதற்கு அவர் இப்போது சக்தியற்றிருக்கிறார். எது எப்படியிருந்தாலு மிருக்கட்டும்; இப்போது நீ கேட்ட அற்பவிஷயம் உனக்குக் கிடைக்காமற் போனதால், உன் தகப்பனார் சூரியோதயமுதல் சூரியாஸ்தமயம் வரையில் தன் தேக வருத்தத்தையும் பாராமல் எவ்வளவு வருத்தப்பட்டு நமக்காக உழைக்கிறாரென்பது, ஒருகாலும் உனக்கு மறந்துபோகமாட்டாது" என்று சொன்னதைக் கேட்டவுடனே, பாக்கியத்துக்கு மெய்தான் என்று மனதில் பச்சாத்தாபம் தோன்றி கொஞ்சம் நேரமாய் அவள் மனதில் இடங்கொண்டிருந்த துரகங்காரம் நீங்கிப்போயிற்று. தாய் கடைசியில் இதமாய்க்காரணத்துடன் சொன்ன வார்த்தை மகளுக்கு ஆநந்தக் கண்ணீருண்டாகும்படி செய்தது. உடனே பாக்கியமெழுந்து அன்னையை ஆலிங்கனஞ் செய்துகொண்டு பேசவாயெழும்பாமல் சரேலென்று உள்ளே நுழைந்தாள். அங்கேயிருந்த புடவைகளெல்லாம், முன் அண்டை வீட்டுச் சுந்தரியின் சேலையோடு ஒத்துப் பார்க்கும்போது அவள் கண்ணுக்கு எவ்வளவு அவலக்ஷணமாய்த் தோன்றின! இப்போது கெட்ட எண்ணங்களில்லாமல் விவேகத்தோடும் அநுதாபத்தோடும் அவைகளைப் பார்க்கும்போது, 'இந்தப் புடவை எவ்வளவு நன்றாயிருக்கின்றது! இதையா நான் முன் ஒன்றுக்கும் உதவாதென்று நினைத்தேன்' என்று ஆச்சரியப்பட்டாள். அதன் பிறகு அவளுக்கு நாளுக்கு நாள் தன் தந்தை தனக்காக வெகுவாய் உழைத்துப் பொருள் தேடுகிறாரென்று அவரிடத்தில் விசேஷமான கௌரவமும் விசுவாஸமு முண்டாயிற்று. இப்படியிருக்கையில் தங்கள் அடுத்த ஊரில் வைசாகோற்சவம் சமீபித்தது. அதற்கு இவர்கள் அனைவரும் போயிருந்தார்கள். அங்கே நற்புத்தி பிறந்த பாக்கியமானவள் நல்லறிவும் தெய்வபக்தியுமுள்ள மேலோர்களுடைய கூட்டத்தில் சேர்ந்து பேரானந்தமடைந்திருந்தாள். தான் முன் செய்துவந்த அற்ப சக்வாசத்தை அடியோடு மறந்துவிட்டாள்.

சில நாளில் சுபுத்தியானவள் மிக்க கல்வியும் திறமையும் விவேகமுமுள்ள ஒரு பிள்ளையைத் தேடித் தன் மகளுக்கு மணஞ் செய்வித்தாள். அம்மருமகன் மிகச் சமர்த்தனாயிருந்தமையால், தன் கல்வித்திறமை, பேசுந்திறமை, நடு நிலைமை முதலிய நற்குணங்களால் ராஜசமஸ்தானத்தில் சிறந்த உத்தியோகம்பெற்றுப் பேரும் பிரசித்தியுமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். பாக்கியமும் வரவுக்கேற்றபடி வாழவேண்டுமென்று முன் தனக்குத் தாய் சொல்லிய நற்புத்தியை மறவாமல் கணவனுள்ளத்திற் கியைந்தபடி இல்லறம் நடத்தி வந்தாள்.

இப்படி நாலைந்து வருஷம் கழிந்தது. பின் பொருதடவை பாக்கியம் மிகவும் பெருமை பெற்ற தன் புருஷனோடு பக்கத்து ஊர்த் திரு

நாளுக்கு வந்திருந்தாள். அவள் பிறந்த வீட்டிலிருந்து தாய்தந்தை முதலியவர்களும் அதன் அண்டைவீட்டு ஜனங்களும் புறப்பட்டுப் போனார்கள். சுபுத்தி தன் பிள்ளை, பெண்களோடு மகளும் மருமகனும் வந்திறங்கி யிருக்குமிடத்திற்குப் போய்ச் சேர்ந்து மகளைப் பார்த்து ஓடிவந்து ஆலிங்கனஞ் செய்துகொண்டு ஆனந்தம் உள்ளடங்காமல், "என் கண்மணி! முன் நான் வல்லவனான புருஷனையே மணம்புரியவேண்டுமென்று எடுத்துச் சொன்னதைத் தடுத்துப் பேசினாயே; அதைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறாய்" என்று கேட்டதற்கு: பாக்கியம், "அம்மா! என்னைப் போல புத்தியீனமாயிருந்தவர் ஒருவருமில்லை; அதற்காக நீ இப்போது என்னை எவ்வளவு தண்டித்தாலும் தண்டிக்கலாம். செல்வச் செருக்காயிருக்க எனக்கு ஒருபோதும் இஷ்டமில்லை. முன் நீ போதித்த போதனையைக் கேளாமலிருந்தால் இப்போது நான் எப்படியிருப்பேனோ? அதிருக்கட்டும் அம்மா! இப்பட்டணத்து வேடிக்கையைச் சுற்றிப்பார்த்து வருவோம் வருகிறாயா?" என்றாள்.

அப்படியே அன்றையதினம் மாலைவேளையில் தாயும் பெண்ணுமாய்ப் புறப்பட்டு ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு பற்பல வினோதக் காட்சிகளைக் கண்டுகளித்துத் திரும்பி வருகையில், சுபுத்தியானவள் ஒரு வீட்டு வாயிலண்டை வண்டியை நிறுத்தக் கட்டளையிட்டாள். பாக்கியம் அதுகண்டு "அம்மா! இங்கே ஏன் நிற்கவேண்டும்? அது யார் வீடு?" என்று கேட்டதற்கு, சுபுத்தி "இங்கே ஒரு மனிதனுக்காகக் கொஞ்சநேரம் காத்திருக்கவேண்டியிருக்கிறது, வண்டியை ஓரமாய் நிறுத்துவோம்" என்றாள்.

அங்கே வண்டி நிற்கையில் அந்த வீட்டிலிருந்து, தலைநரைத்துத் தாடையொட்டிக் கண் குழிந்து கால் தள்ளாட அரையிலொரு கந்தைத் துணியோடு ஒரு கிழவன் வெளியே வந்தான். அவனைப் பார்த்துச் சுபுத்தி "என் செல்வமே பாக்கியம்! இவர் யார், அடையாளந் தெரிகிறதா உனக்கு" என்றாள். பாக்கியம் அவரைக் கொஞ்சநேரம் நிதானித்துப்பார்த்து "இவர் நம்மண்டைவீட்டுப் பெரியவரல்லவா? அவர்க்கு இதற்குள் இவ்வளவு தள்ளாமை வந்துவிட்டதா? ஐந்தாறு வருஷத்திற்கு முன் நான் பார்த்தபோது நாற்பது வயதுக்குட்பட்டவராயிருந்தாரே" என்று ஆச்சரியப்பட்டுக் கேட்க, அதற்கு "ஆம், அவர்தான்; மூன்று வருஷத்திற்குமுன் இவர் எவ்வளவு செல்வமும் செல்வாக்குமுடையவராயிருந்தார்? இப்போது அவர்க்கு வந்திருக்கிற ஈனஸ்திதியைப் பார்த்தையா? அவர் வைத்திருந்த சாமான்கள் எல்லாம் விற்றுயிற்று. கடனோ கணக்கு வழக்கில்லாமல் ஏறிப்போயிற்று. அதை யடைக்க வகையில்லை. கொஞ்சகாலம் செவ்வையாய்ப் பிழைத்தவர் பாவம்! பெண்களுடைய பேராசையாலும் பேதைமைத்தனத்தாலும் இப்படியாய்விட்டார். இச்சமயத்தில் தலைவர்கள் யாராவது இவரைக் கைதூக்கி விட்டால் மிக்க நன்மையுண்டு" என்று தாய் சொல்லக் கேட்டு மகள் "அம்மா! இப்போது இவர் பெண்கள் எத்தன்மையா யிருக்கிறார்களோ?" என்று வினவினதற்கு, சுபுத்தி "சற்றுநேரம் பொறு, சொல்லுகிறேன்" என்றாள். இவர்கள் இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில், அவர் பெண்கள் அதிக ஆடம்பரத்துடன் நல்ல ஆடையாபரணங்கள் அணிந்து கைகொட்டி நகைத்துக்கொண்டு வெளியே ஓடிவந்தார்கள். அதைப் பார்த்து பாக்கியம், "நான் கேட்டது இவர்கள்தானே அம்மா" என்றாள். அதற்குச் சுபுத்தி: "வேறு யார் இப்படி நடப்பார்கள்? இதை உனக்குக் காட்டவேண்டுமென்றே இங்கே கொஞ்சநேரம் நின்றேன். நேரமாயிற்று, வீட்டுக்குப் போவோமென்று. சொல்லி வண்டியை யோட்டும்படி வண்டிக்காரனுக்குத் திட்டஞ்செய்தாள். வீட்டுக்குச் செல்லுகையில் தாய் பெண்ணைப் பார்த்து "என் கண்ணே! வரவுக்குத் தக்கபடி செலவு செய்வது நல்லதா, அதிகமாய்ச் செலவு செய்வது நல்லதா? இப்போது அதைப்பற்றி உனக்கு என்ன தோன்றுகின்றது?" என்று கேட்டாள். அதற்கு "முன் எனக்கிருந்த அறியாமையைப்பற்றி நீ என்ன செய்தாலும் நான் அதற்கு ஆளாக வேண்டியதுதான். இனி நான் அதை ஒருபோதும் மறக்கமாட்டேன். என்னைச் சேர்ந்தவர்களுக்கும் இதைப்போதிப்பேன். நல்லது இந்தப் பெண்களுக்கு இன்னும் அறிவுண்டாகவில்லையா? முன்னிருந்தது போலவே இப்போதும இருக்கிறார்களே. நாளுக்கு நாள் நன்னடக்கையும் விவேகமு

ஒழுங்கு ஒருபணம் சளுக்கு முக்காற்பணம்

முண்டாகாதா? என்று மகள் கேட்டதற்கு, தாய் "என் அருமை மகளே! அதெல்லாம் இளமையிலேயே உண்டாகவேண்டும். செடியில் வணங்காதது மரமாய் வணங்குமா? வாலிபத்தில் எவ்வழியில் மனமிறங்கி விடுகிறதோ அதே வழியாய்த்தான் ஆயுள்முழுதும் செல்லும். விளையும் பயிர் முளையிலேயே தெரியாதா? ஆதலால் உலகத்தில் தம்மை யடுத்தவர்களுக்கு இளமையிலேயே நல்ல புத்திமதிகளைப் போதித்து, அவர்களை நல்வழியில் திருப்புகின்றவர்களும், அப்படித் தங்களை நல்வழியில் நடத்தக்கருதிய பெரியோர் பேச்சைச் சிரமேற்கொண்டு அதன்படி நடக்கும் வாலிபர்களுமே இவ்வுலகில் சுகம் பெறுவார்கள்" என்றாள். இப்படியாகத் தாயும் மகளும் நல்வழியாய்ப் பேசிக்கொண்டு வீடுவந்து சேர்ந்து தினந்தோறும் கடவுளைத் தொழுதுகொண்டு சுகமாய் வாழ்ந்திருந்தார்கள். சுபம்.

---

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS & NOTES

**சென்னைப் புதியகவர்னர்**

சென்ற மாதத்தில் நாம் குறிப்பிட்டபடி நாளது மாதம் 10-ம் தேதியன்று நமது புதிய கவர்னரான வில்லிங்டன் பட்டவர்த்தனர் சென்னைக்கு வந்து வேலையை ஒப்புக்கொண்டனர். இன்னும் ஐந்து வருஷகாலம் நமது மாகாணத்தின் க்ஷேமலாபங்களைக் கருதிக் காரியங்களைச் செய்ய முன் வந்திருக்கும் ஸ்ரீமானுக்கு நாம் மனமார்ந்த நல்வரவு கூறுகிறோம். வில்லிங்டன் பட்டவர்த்தனர் சென்னைக் கவர்னராக நியமிக்கப்பட்டதில் அடங்கியுள்ள அம்சமொன்றை நமது அபிமானிகள் அறியவேண்டுகிறோம். சாதாரணமாக இந்தியாவில் ஒரு தரம் கவர்னர் உத்யோகத்தையோ, கவர்னர் ஜனரல் உத்யோகத்தையோ வகித்த ஒருவருக்கு மறுபடியும் அப்படிப்பட்ட உத்யோகத்தைக் கொடுப்பதில்லை. கால அளவை அதிகப்படுத்துவதும் துர்லபம். வில்லிங்டன் பட்டவர்த்தனர் விஷயத்தில் மேற்கூறிய இரண்டு அனுஷ்டானங்களும் மாறிப்போயின. இம்மாகாணத்துக்கு இவர் வருமுன்னர், பம்பாய் மாகாணத்தில் சாதாரணமாக ஏற்பட்ட கால அளவுக்கு மேற்பட்டுக் கவர்னராக இருந்தனர். ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஒத்துழைக்க அதனால் இந்தியாவில் சுயராஜ்யம் சீக்கிரத்தில் கிட்டவேண்டுமென்னும் கொள்கை, தமது முக்கிய நோக்கங்களில் ஒன்றென்று இந்த ஸ்ரீமான் வெளியிட்டிருக்கின்றனர். இவரது மனோபீஷ்டப்படி காரியம் இனிது முடியுமாறு ஸர்வேசுவரன் கிருபை புரிவாராக.

**பால் வசதி**

பொதுவாக எங்கும், சிறப்பாகச் சென்னை நகரிலும், நல்ல பால் கிடைக்காத துர்த்தசையை ஒருவாறு விலக்கவெண்ணிக் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் ஒரு ஏற்பாட்டை நமது அபிமானிகள் அறியவேண்டுகிறோம். பால் வியாபாரிகளின் சவுகரியத்துக்காக, இங்கிலாந்திலிருந்து நான்கு உயர்ந்த காளைமாடுகளை வரவழைத்து, அவைகளின் மூலமாக சொல்பச் செலவில் நல்ல ஜாதிக் கன்றுகளை நாட்டுப்பசுக்கள் ஈனுமாறு செய்வது; இப்படி ஈனும் கன்றுகளைக் கவர்ன்மெண்டாருக்கு நிஷ்கரிசையான ஒரே விலைக்குக் கொடுப்பது; இந்தக் கன்றுகளை ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வளர்த்து, பாற்பசுக்களை உண்டாக்கும்படி செய்வது; பால்காரர்களுக்கென்று ஒரு ஐக்கிய சங்கம் ஏற்படுத்தி அதன் மூலமாக, வைக்கோல், முதலியவைகளை வாங்குவதும், பால், தயிர், வெண்ணெய், நெய் இவைகளை விற்பதும், கடன் கொடுத்து வாங்குவதும் ஆகிய காரியங்கள் செய்யப்படும். அங்குரார்ப்பணமாக, இங்கிலாந்திலிருந்து நான்கு உயர்ந்த காளைமாடுகள் நாளது நவம்பர் மாதத்தில் வரும். வருமுன்னால் அவைகளை நன்றாகப் பரிசோதித்து க்ஷயம், வெக்கை முதலிய நோய்களைத் தடுக்கும் இனாகுலேஷன் (அம்மை குத்தல்) செய்வார்கள். மொத்தத்தில் இந்த நான்கு காளைமாடுகளும் சென்னைக்கு வந்து சேர 45,000 ரூபாய் செலவாகும். நன்றாய் முடிவது எல்லாம் நன்றே.

* * *

தேவகோட்டையில் டிப்டி கலெக்டராக விருந்த வரும், எமது பத்திரிகையின் அந்த

**வி. எஸ். அனந்தராமய்யரின் தேக வியோகம்.**

ரங்க அபிமானிகளுள் ஒருவருமான ஸ்ரீமான் வி. எஸ். அனந்தராமய்யரவர்கள் நாளது மார்ச் தஞ்சாவூரத்தினால் திடீரென்று காலமானதைக் கேட்டுத் துக்கிக்கிறோம். ஸ்ரீமான் ஐயரவர்கள் புரொவின்ஷியல் ஸிவில் ஸர்விஸில் சேர்ந்து 17 வருஷங்களாகின்றன. இவரது அபூர்வ சாமர்த்தியத்தை வியந்த கவர்ன்மெண்டார் இவரைச் சிலகாலம் கவர்ன்மெண்டு ஆபீஸில் கீழ்க்காரியதரிசியாக நியமித்திருந்தனர். ஸ்ரீமான் ஐயரவர்கள் உசிலம்பட்டியில் டிவிஷனல் ஆபீஸராக இருந்தகாலத்தில், அங்குள்ள கள்ளர்களை நல்வழிக்குக் கொணர்ந்த விஷயமும், அவர் தாலூகா போர்டு காரியங்களை நிர்வகித்த மாதிரியும் பெரிதும் பாராட்டற்பாலன. ஜன ரஞ்சகத்வம், சாமர்த்தியம், யோக்கியதை, மனோதிடம் முதலியவைகளில் ஐயரவர்களை எல்லா உத்தியோகஸ்தர்களும் பின்பற்றிச் செல்லலாம். நாற்பது வயதுக்குள்ளேயே ஸ்ரீமான் ஐயரவர்களுக்கு அகால மிருத்யு ஏற்பட்டுவிட்டது. ஐயரவர்களுக்கு ஒரு குமாரனும் ஒரு குமாரத்தியும் இருக்கின்றனர். அவர்களுக்கும் ஐயரவர்களின் தர்மபத்னிக்கும் அவரது பந்து ஜனங்களுக்கும் நாம் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

* * *

**ஆயுதச் சட்டம்.**

துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத் தற்காப்புக்காக வைத்துக்கொள்ளும் விஷயத்தில் ஐரோப்பியர்களையும் இந்தியர்களையும் பிரத்தியேகப்படுத்தி, ஆயுதச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்ததைப்பற்றி நமது பிரமுகர்கள் அநேகமுறை கண்டித்துப் பேசியதுண்டு. வருஷாவருஷம் கூடும் காங்கிரஸ் மஹா ஸபையில் இப்படிப்பட்ட வித்யாசத்தை அகற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்வது பதிவு. இப்போது, இந்தியா கவர்ன்மெண்டார் இவ்விஷயமாக வெளியிட்டிருக்கும் உத்தரவு நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஜாதி வித்யாசம் பற்றிய விவாதம் இனி இருக்காது. தகுந்த அந்தஸ்தும் யோக்கியதையும் உள்ளவர்களுக்கெல்லாம், ஆயுதம் வைத்துக்கொள்வதற்காக, முன் விசாரணையின்றி லைசென்ஸ் கொடுக்கப்படும். சாதாரணமாக, கவுரவ பட்டம் பெற்றவர்கள், சட்ட நிரூபண ஸபை யங்கத்தினர்கள், 1,000 ரூபாய்க்குக் குறையாத நிலவரி செலுத்துவோர்கள், மூன்று வருஷங்களுக்குக் குறையாமல் வருஷமொன்றுக்கு ரூ. 3,000க்குக்குறையாத வருமானத்தின்மீது வரி செலுத்துவோர்கள், ரூ 250க்குக் குறையாத சம்பளத்தையுடைய ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள், ராணுவ உத்யோகஸ்தர்கள், கடைசி இரண்டு வகையில் பென்ஷன் பெற்றவர்கள், ஆகிய இவர்களுக்கு அவ்வாறு லைசென்சு கொடுக்கப்படும். காட்டு மிருகங்களினால் பயிர்களுக்குக் கெடுதியுண்டாகாதபடி பாதுகாத்துக் கொள்ள, குடியானவர்களுக்கு அவசியமான போதெல்லாம் லைசென்சு கொடுக்கப்படும். இவையெல்லாம் நமக்குச் சம்மதந்தானென்றாலும், லைசென்சுக்காகச் செலுத்தவேண்டிய தொகையைப் பத்து ரூபாவாக உயர்த்தியது சற்று யோசிக்கவேண்டிய விஷயம் என்பதை நாம் எடுத்துச் சொல்வோம்.

* * *

**நீதி இலாகா.**

நமது மாகாணத்தில் நீதி இலாகாவின் உத்யோகஸ்தர்களுடைய ஸங்கியை கீழ்க்குறித்தபடி அதிகமாக்கப் பட்டிருக்கிறது. இப்படி ஸங்கியை அதிகமானதற்கு அவர்கள் சந்தோஷப்படுவார்களென்றாலும், சம்பள விகிதம் மட்டும் முன்போலவே இருப்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளார்கள். முன்ஸீபுகளின் கடைசி சம்பளத்தை ரூ. 250க்கு உயர்த்த வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் இருந்ததை நாம் அறிவோம். இதுவும் சீக்கிரத்தில் கைகூடுமென எதிர்பார்க்கிறோம்.

ஸப் ஜட்ஜிகள்.

| பழையரீதி | | புதியரீதி | |
|---|---|---|---|
| ஸங்கியை | சம்பளம் ரூ. | ஸங்கியை | சம்பளம் ரூ. |
| 4 | 800 | 6 | 800 |
| 5 | 6.0 | 8 | 650 |
| 9 | 500 | 15 | 500 |
| 18 | | 29 | |

டிஸ்டிரிக்டு முன்ஸீபுகள்.

| | | | |
|---|---|---|---|
| 33 | 400 | 34 | 400 |
| 33 | 300 | 36 | 300 |
| 33 | 250 | 36 | 250 |
| 31 | 200 | 38 | 200 |
| 130 | | 144 | |

332





தஞ்சையில் 2-வது மஜ்லிஸ் - உல் - உலமாவில்
அக்கிராசனம் வகித்த கனம்
ஸர் அப்துல் ரஹிம்

BY THE COURTESY OF
"SWADESAMITRAN"